பக்கம்: எட்டு
விலை ரூபா 5-00

Registered as a Newspaper in Sri Lanka.

04 MAR 2001

# வலம்புரி
# VALAMPURI

அழகிய தங்க நகைகளை
உங்கள் எண்ணம்போல்
தெரிவுசெய்திட
**அர்ச்சனா ஜுவலர்ஸ்**
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1539)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 மாசி 20 ஞாயிற்றுக்கிழமை (4-03-2001) தொலைபேசி: 3378 ஒலி: 74

## ★ இனப்பிரச்சினை தொடர்பாக
# புலிகளை பேச்சிற்கு வரவழைக்க
# யுத்தம்;சர்வதேச அழுத்தம்அவசியம்

## புரண்ட்லைனுக்கு ஜனாதிபதி பேட்டி

(புதுடில்லி)

**தமிழீழ விடுதலைப் புலிகளை இனப்பிரச்சினை தொடர்பான சமாதான முயற்சிக்கு சொண்டுவந்து பேச்சுவார்த்தை மேசைக்கு வரவழைப்பதற்கு சர்வதேச அழுத்தம் முக்கிய தேவையாகும் இதனை சர்வதேச சமூகம் உணர்ந்து செயற்பட வேண்டும். இராணுவ முனைப்புக்களை நாம் முன்வைத்துச் செயற்பட்டால் தான் சமாதான முயற்சியில் விடுதலைப் புலிகள் அக்கறை காட்டுவார்கள்**

இந்தியாவில் இருந்துவெளிவரும்பு ரொன்ட்லைன்சஞ்சிகை ஆசிரியர் இராமிற்கு அளித்த பேட்டியில் ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அப் பேட்டியில் ஜனாதிபதி சந்திரிகா மேலும் தெரிவித்திருப்பதாவது;

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகள் ஈடுபடுவதற்கு சர்வதேச அழுத்தம் அவசியம் தேவைப்படுகிறது. சர்வதேச அழுத்தம் இருந்தால் தான் அவர்களை பேச்சுவார்த்தை மேசைக்கு வரச் செய்ய முடியும்.

புலிகளைப் பொறுத்தவரை

→ 8ஆம் பக்கம் பார்க்க

## ரவி கருணாநாயக்காவின் தாயின் வீட்டில் தலை மாமியார் வீட்டில் கை

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்காவின் தாயின் வீட்டிற்குச் சென்ற இனந்தெரியாத சிலர் மனிதத்தலையொன்றை பார்சலில் வைத்து கொடுத்துள்ளனர். அதேவேளை ரவிகருணாநாயக்காவின் மாமியார் வீட்டிற்குச் சென்றவர்கள் துண்டிக்கப்பட்ட கையொன்றை பார்சலில் வைத்துக் கொடுத்துள்ளனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இப்பார்சலுடன் கிடைக்கப்பட்டுள்ள கடிதத்தில் அதிகம் கத்தினால் இதுதான் நடக்குமென்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ந)

## நோர்வே தூதுவர் எரிக்சோல் கொழும்பில்

(கொழும்பு)

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் நேற்று இரவு கொழும்புவந்து சேர்ந்துள்ளதாக பிந்திக் கிடைத்த ஐரோப்பிய செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்புவந்துசேர்ந்துள்ள தூதுவர் இன்று ஜனாதிபதியை சந்தித்துப் பேசிவிட்டு லண்டன் சென்று விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரான அன்ரன்பாலசிங்கத்தையும் சந்தித்துப் பேசவுள்ளார் என்றும்அச்செய்திகள்மேலும் தெரிவித்துள்ளன.

லண்டனில் இருந்து கொழும்பு வந்துசேர்ந்துளள தூதுவர் லண்டனில் அன்ரன்பால சிங்கத்தையும் சந்தித்து விட்டு வந்ததாக அன்ரன்பாலசிங்கத்துடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம)

## லக்ஷ்மன் கதிர்காமர் தூதுவர்களுடன் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கையில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்களைவெளிநாட்டமைச்சர்லக்ஷ்மன்கதிர்காமர் சந்தித்துப் பேச்சுவார்தை நடத்தியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளை பிரித்தானிய அரசு தடை செய்த பின் முதன் முறையாக இப்பேச்சுவார்த்தை வெளிநாட்டமைச்சில் நடைபெற்றது.

நேற்று மாலை 4மணி முதல் 5மணி வரை இடம் பெற்ற இப் பேச்சுவார்த்தையின் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் தடை அறிவிப்புக்கு பின் எழுந்துள்ள நிலைப்பாடுகள், சமாதான முயற்சிகள், தாலிபானில் புத்தரின் சில சிலைகள் உடைக்கப்படுவது ஆகியன குறித்தும் ஆராயப்பட்டது. இச்சந்திப்பில்அமெரிக்கா,இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், பிரிட்டன், கனடா ஆகிய நாடுகள் உள்ளிட்ட பல நாடுகளின் தூதர்கள் கலந்து கொண்டனர். (வ)

## மூவர் சுட்டுக் கொலை

(கொழும்பு)

கொறவப் பொத்தானை வாகல் விறட பகுதியில் சேனைப்பயிருக்குக் காவல் நின்ற மூன்று விவசாயிகள் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இச் சம்பவம் நேற்று இடம் பெற்றுள்ளது. (ந)

## கதிர்காமருக்கு நாளை தீர்மானம்

(கொழும்பு]

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினை பிரித்தானியா தடை செய்தமைகுறித்து அமைச்சர் கதிர்காமருக்கு பாராட்டுத் தெரிவிக்கும் தீர்மானத்தை சுதந்திரக்கட்சி நிறைவேற்றியுள்ளது.

இன்று நடைபெறவுள்ள பேராளர் மகாநாட்டிலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ம

## ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கரையோரப் பகுதிகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் நேற்றுக்காலையிலும் மாலையிலும் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்ட வண்ணம் இருந்தனர்.

இச் ஷெல்கள் பூநகரி. கல்முனைப் பகுதிகளில் வீழ்ந்து வெடித்ததாகத் தெரிவிக்கப் படுகிறது. (ம)

## மட்டுவில் தெற்கில் குண்டு மீட்கப்பட்டது

[கொழும்பு]

மட்டுவில் தெற்குப்பகுதியில் இருந்து கடந்த 2ஆம் திகதி இராணுவத்தின் பொறியியல் பிரிவினரால் மோட்டார் குண்டொன்று கண்டுபிடிக்கப்பட்டு செயலிழக்கப்பட்டதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த 1ஆம் திகதி வண்ணார்பண்ணைப் பகுதியிலிருந்து கண்ணிவெடியொன்று, படையினரால் மீட்கப்பட்டதாகவும் அதே தினத்தன்று கடுடைப்பகுதியில் உள்ள கிணறென்றில் இருந்து பிஸ்ரல் ஒன்று கைப்பற்றப்பட்டதாகவும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [9]

## வ.பி.போ.வ. சபைக்கு 10 புதிய பஸ் வண்டிகள்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்து சபைக்கு பத்துபுதிய பஸ்வண்டிகளை அனுப்பி வைப்பதற்கு போக்குவரத்து அமைச்சர் தினேஷ்குணவர்த்தனா இணக்கம் தெரிவித்துள்ளதாக வடபிராந்தியபோக்குவரத்துசபை பொது முகாமையாளர் வி. எஸ். சொக்கலிங்கம் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளை அடுத்து இப்புதிய பஸ்வண்டிகளை அனுப்பி வைப்பதற்கு போக்குவரத்து அமைச்சர் இணக்கம் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்படவிருக்கும் பத்து பஸ்வண்டிகளில் 8 சிறிய ரக பஸ்வண்டிகளும் 2 பெரியரக பஸ்வண்டிகளும் அடங்குவதாக பொது முகாமையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## இந்தியத் தூதுவர் நேற்று திடீர் விஜயம்
### அரச அதிபரை சந்தித்தார்

[யாழ்ப்பாணம்]

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபாலகிருஷ்ண மேனன் காந்தி திடீர் விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

யாழ்ப்பாணம் வந்திருந்த இந்தியத்தூதுவர், யாழ். அரச அதிபர் க. சண்முகநாதனை சந்தித்து யாழ் குடாநாட்டு நிலவரம்பற்றி கேட்டறிந்துகொண்டார்.

இந்தியத்தூதுவர் நல்லூர் கந்தசாமி கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்தார். பருத்தித்துறைக்குச் சென்று சாரதா சேவாச்சிரம சுவமி சித்ரூபானந்தாவைச்சந்தித்து சுமார் ஒருமணிநேரம் பேச்சு நடத்தியபோதும் பேச்சுக்கான விபரம் எதுவும் தெரியவரவில்லை.

இது இவ்வாறிருக்க இந்தியா அன்பளிப்புச் செய்த யுத்தக்கப்பல் பருத்தித்துறை கடற்பரப்பில் தரித்து நிற்பதாகவும் அதில் இலங்கை கடற்படையினருக்கு இந்திய

→ 8ஆம் பக்கம் பார்க்க

## இந்தியா-பாகிஸ்தான் முறுகல்நிலை தீர்த்துவைக்க இலங்கை முயற்சி!
### லக்ஷ்மன் கதிர்காமர் அறிவிப்பு

சார்க் அமைப்பில் அங்கம் வகிக்கும் இந்தியா - பாகிஸ்தானுக்கிடையே நிலவும் முரண்பாட்டை நீக்கும்முயற்சியில் ஈடுபடப்போவதாக இலங்கை அறிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன்கதிர்காமர்வழங்கிய பேட்டியொன்றிலேயே இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்: இவ் வருட இறுதிக்குள்சார்க் அமைப்பின் கூட்டம் நடாத்தப்படும்எனக் கூறினார். (ந-9)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### ஆனந்த சோதி வைத்திய நிலையம் உரும்பிராய்

சர்வாங்கசுழும், குழந்தை வைத்தியமும் மருதனார்மடச் சந்திக்கும், உரும்பிராய் சந்திக்குமிடையே விவசாயக் கல்லூரிக்கு அருகாமையில் இயங்குகின்றன Dr.சின்னப்பு ஆனந்த சோதி வைத்திய சாலை உரும்பிராய்.

(2588)

### மணமகன் தேவை

1973ம் ஆண்டில் பிறந்த அழகியறோமன் கத்தோலிக்க கௌரவமான குடும்ப பாங்கான மகளுக்கு பெற்றோர் தகுந்த வரனை எதிர்பார்க்கிறார்கள் மணமகன் வெளிநாட்டிற்கு அழைத்து செல்வதானாலும் அல்லது உள்நாட்டிலும் வேறுமதத்தவர்கள் ஆனாலும் விண்ணப்பிக்கலாம் தரகர் தேவையில்லை கடிதப் மூலம் தொடர்பு கொள்ளவும் விளம்பர இல-109 வலம்புரி 15 வெள்ளாந் தெரு யாழ்ப்பாணம்.

(கி-1556)

### செவ்வாய் மாற்றமும் நீசச்சனி வக்கிரமும்

ரூ10/-எங்கும் விற்பனையாகிறது யுத்தச் செவ்வாய்க்கு- வக்கிர நீசச்சனி தீய பார்வையகன்றதால் யுத்தம் தணிகிறது கணிப்பாசிரியர்- சத்யா (8ம்மைல்)ஆனைக் கோட்டை தொலைபேசி 021- 2753 கிடைக்குமிடம் பூபாலசிங்கம் மக்மிலன் புத்தகசாலை யாழ்ப்பாணம்:

(2588)

## மாணவன் காயம்

[யாழ்ப்பாணம்]

மெய்வல்லுநர் போட்டிக்கான உயரம் பாய்தல் பயிற்சியில் ஈடுபட்டிருந்தவேளைகையில் காயமடைந்த அச்சுவேலி மகாவித்தியாலய உயர் வகுப்பு மாணவன் இ. அகிலன் [வயது 17] யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

[உ-6]

### உரிமைத்தகடு வழங்கல்

(மண்டைதீவு)

தீவுப்பகுதி தெற்கு பிரதேச சபையினால் 2001 ஆம் ஆண்டுக்கான வியாபாரஉரிமம் துவிச்சக்கரவண்டி,மாட்டு வண்டிக்களுக்கான உரிமத் தகடுகள் என்பன வழங்கப்பட்டு வருகின்றன.

வேலணை, மண்டைதீவு, புங்குடுதீவு, நயினாதீவு உப அலுவலங்களூடாக விநியோகிக்கப்பட்டு வரும் இவ் உரிமங்களை முதலாம் கந்தாயத்துக்குள் பெற்றுக் கொள்ளுமாறுபிரதேசசபைத் தலைவர் என்.கருணாகரகுருமூர்த்தி பொதுமக்களைக் கேட்டுள்ளார்.

(உ-11)

# உலகத்தலைவர்களை இலக்குவைத்து

# புலிகள் தாக்குதல் நிகழ்த்தலாம்

## தடைக்கு இதுவே காரணம்

[கொழும்பு]

உலகத் தலைவர்கள் பலரை விடுதலைப் புலிகளின் தற்கொலைக் குண்டுதாரிகள் இலக்கு வைக்கலாம் என எழுந்துள்ள அச்சுறுத்தல் நிலையே பிரிட்டன் அரசின் புலிகள் மீதான தடைக்குக் காரணம் என ஊடகத்துறை அமைச்சர் அனுரா பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களில் கைதேர்ந்த தமது சேவையை வேறு நாட்டுபயங்கரவாத அமைப்புகளுக்கும் விடுதலைப் புலிகள் வழங்கலாம் என்னும் அச்சம்.

மற்றும் உலகத் தலைவர்களின் உயிர்களைக் காக்கும் வகையிலேயே பிரிட்டன் விடுதலைப் புலிகள் அமைப்பை தடைசெய்தது என்று ஊடகத்துறை அமைச்சர் நியாயப் படுத்தியுள்ளார்.

அத்துடன் உலகின்பல்வேறு கிளர்ச்சி இயக்கங்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான தொடர்புகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

# கரவெட்டியில் விற்கப்படும் தென்மராட்சி ஆடுகள்

## ஆசாமிகளின் திருவிளையாடல்

(சங்கானை)

தென்மராட்சியைச் சேர்ந்த உசன், விடத்தல் பளை, மிருசுவில் பகுதிகளைச் சேர்ந்த ஆடு மற்றும் மாடுகள் சட்டவிரோதமான முறையில் கொண்டுவரப்பட்டு நெல்லியடி, கரவெட்டிப் பகுதிகளில் இறைச்சிக்காக வெட்டப்படுவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

தமது வீடுகளை பார்வையிட்டு வருவதாக கிராம சேவகரிடம் பொய் கூறி அனுமதிக் கடிதத்தை பெற்று அவற்றை இராணுவத்தினரிடம் காட்டிவிட்டு மேற்கண்ட பகுதிகளுக்கு சென்று ஆடு, மாடுகளை கொண்டு வருவதாகவும் பின்னர் இறைச்சிக்காக வெட்டப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

சில வேளைகளில் கிராம அலுவலர்கள் வழங்குவது போன்று போலி அனுமதிச் சீட்டுக்களையும் பிரஸ்தாபகில்லாடிகள் பயன் படுத்தி வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது

கால் நடைகள் மட்டுமன்றி பிறரது உடைமைகளையும் ஈவிரககமின்றி இத்தகைய ஆசாமிகள் சூறையாடி வருவதாகவும் பொது மக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (க-124)

# தோட்டத்தொழிலாளர் மீது காடையர் தாக்குதல்

(கொழும்பு)

ஹற்றனில் இடம்பெற்று வரும் தோட்டத் தொழிலாளர்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து எட்டியாந் தோட்டைப் பகுதியில் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தோட்டத் தொழிலாளர் தாக்கப்பட்டுள்ளனர்:

இது குறித்து கேகாலை பொலிஸில் பாதிக்கப்பட்டவர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

உடனடியாக வேலைக்குத் திரும்புமாறு காடையர்கள் பலர் தம்மைத் தாக்கியதாக அவர்கள் முறைப்பாடு செய்துள்ளனர். (உ)

## படையினர் மீது

# விசாரணை ஆரம்பிக்க சட்டமா அதிபர் பணிப்பு

(கொழும்பு)

படையினர் மீதான குற்றச் சாட்டுக்களின் விசாரணைகளை உடன் ஆரம்பிக்குமாறு நீதிமன்றங்கள் மற்றும் மேல் நீதிமன்றங்களுக்கு சட்டமா அதிபர் கே.வி கமலசபேசன் பணிப்புரை விடுத்துள்ளார்.

சுமார் 600 பொலிஸார் மற்றும் படையினர்க்கு எதிரான விசாரணைகளைஉடன் நடத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

காணாமல் போனோர் தொடர்பான விசாரணைகளை நடத்திவரும் ஆணைக்குழுவின் சிபார்சுகளுக்கமையவேமேற்படி 600 பேரும்நீதிமன்ற விசாரணைகளுக்கு முகம் கொடுக்கவுள்ளனர்; (உ)

# தற்கொலை மரணங்கள் வவுனியாவில் அதிகரிப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் தற்கொலை மரணங்கள் அதிகரித்து வருவது அங்கு பெறப்பட்ட புள்ளிவிபரங்களினின்றும் தெரியவந்துள்ளது.

இந்த வகையில் கடந்த வருடத்தில் மட்டும் அங்கு 691 தற்கொலை முயற்சிகள் இடம் பெற்றுள்ளன.

இவர்களில் 62 பேர் மரணத்தை தழுவியுள்ளனர்.

வறுமை மற்றும் வாழ்வில் ஏற்பட்ட விரக்தி,நாட்டுச் சூழ்நிலை இவையே தற்கொலை மரணங்களை ஊக்குவித்திருப்பதாக வவுனியா மாவட்ட வைத்தியர் ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உலகிலேயே தற்கொலை புரிவோர் எண்ணிக்கையில் இலங்கை இரண்டாம் இடத்தில் இருப்பதும், கடந்தவருடத்தைப் பொறுத்தவரை இலங்கையில்வவுனியா மாவட்டத்திலேயே அதிகப் பேர் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-5)

# கண்ணீர் அஞ்சலி

### திருமதி முருகேசு நாகரெத்தினம்

கொக்குவில் லயன்ஸ் கழகத் தலைவரும் ஆங்கில மருந்து வணிகர் சங்கத் தலைவரும், யாழ்ப்பாணம் வெஸ்கோ பாமசி, யாழ் தனியார் மருத்துவமனை (பலாலி வீதி) உரிமையாளர் க.மு. பத்மநாதன் அவர்களின் அன்புத் தாயார் திருமதி முருகேசு நாகரெத்தினம் அவர்களின் பிரிவால் (02 - 03 - 2001) துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்திக்காகவும், இறைவனை இறைஞ்சிக் கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்:

லயன்ஸ் பா. லிங்கநாதன்
[வசந்தம் பாமசி உரிமையாளர் யாழ்ப்பாணம்]
மற்றும் ஊழியர்களும்

(2585)

## தடகள விளையாட்டு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான தடகள விளையாட்டுப் போட்டி நாளையும் நாளை மறுதினமும் ஊர்காவற்றுறை பொது மைதானத்தில் உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ் செல்வநாயகம் தலைமையில் இடம் பெறவுள்ளது.

[உ-75]

### எதிர்க்கட்சிகள் மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

தற்போது ஆட்சியதிகாரத்தில் இருக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசை பதவி கவிழ்க்கும் முயற்சியில் எதிர்க்கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, ஜே. வி. பி. என்பன ஈடுபட்டு வருவதாக அமைச்சர் திஸநாயக்கா குற்றம் சாட்டியுள்ளார்;

[உ-4[

## இன, மத, பேதமற்று

# சர்வதேச செஞ்சிலுவை சேவை புரிகிறது

(யாழ்ப்பாணம்)

இன,மத,மொழி, அரசியல் வேறுபாடுகள் இன்றி பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியளித்து வரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இலங்கையிலும் அதன் சேவையினைகுறிப்பாக வடக்கு- கிழக்கிலும் சிறப்பாக மேற்கொண்டு வருகிறது;

இவ்வாறு நேற்றைய தினம் நடைபெற்றபத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் செயலகப் பிரதி நிதி ஷேச் மாமி (Serge marmy) தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; தற்போதைய போர்க் கால சூழ்நிலையில்காணாமல் போதல்கள், மனிதநேயமற்ற துன்புறுத்தல்கள், . பலவந்தமான கைதுகள் சம்பந்தமாக முறைப்பாடுகள் வரும் போது அவைபற்றி தகவல்களைச் சேகரித்து உரியவர்களிடம் தொடர்பு கொள்வதனூடாக மீண்டும் மீண்டும் அவ்வாறான குற்றச் செயல்கள் ஏற்படாத வண்ணம் தடுத்து வருகின்றது.

அத்துடன் பொது மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப் படவேண்டும் என்பதை போரில் ஈடுபடுவோருக்கு வழங்கும் பரப்புரைகளின் மூலம் விளக்கி வருகிறோம்.

இவை தவிர தடுப்புக் காவலில் உள்ளவர்கள் தமது உறவினரிடம் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள செஞ்சிலுவை செய்திப் பரிமாற்ற சேவையினையும் வழங்கி வருகிறோம். இதில் குடும்ப நலனையும், மரணச் செய்திகள், கடுமையான வருத்தம் போன்ற செய்திகளேபரிமாற்றப்படுகின்றன.

எனவேபொது மக்கள்தமது தேவைகளுக்கு மட்டும் முன்னுரிமை கொடுத்து எம்மோடு தொடர்பினை ஏற்படுத்தாது நாம் வழங்கும் பரப்புரைகளிலும், மனித முன்னேற்றத்திற்காக எம் மால்நடத்தப்படும் நிகழ்ச்சிகளுக்கும் ஆதரவுதரவேண்டும் என்றார். (க-02,10)

## பதவி உயர்வு வழங்கல்

# பாதிக்கப்பட்ட ஆசிரியர் விபரம் சேகரிப்பு

(கொழும்பு)

பதவி உயர்வு பெறுவதற்குத் தகுதி இருந்தும் பதவி உயர்வு கிடைக்காத ஆசிரியர்களின் விபரங்களை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் திரட்டி வருகிறது;

வடக்கு - கிழக்கில் தகுதி வாய்ந்த 99 சதவீதமான ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டு விட்டதாக கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இருந்த போதிலும், தமக்கு வழங்க வேண்டிய பதவி உயர்வுகள் வழங்கப்படவில்லை என வடக்கு-கிழக்கு ஆசிரியர்கள் செய்தமுறைப்பாட்டினையடுத்தே இவ்விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருவதாக தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் த. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டுள்ளஆசிரியர்களின் விபரங்களை தமது பணிமனைக்கு அனுப்பி வைத்தால் இம்மாதம் 22 ஆம் திகதி இடம் பெறவுள்ள மாகாண கல்வி அமைச்சு ஆலோசனைக் கூட்டத்தில் இவற்றை சமர்ப்பிக்க உதவும் எனவும் மகாசிவம் தெரிவித்துள்ளார் (உ)

### நவக்கிரக-..

னோர் வகுந்துள்ளனர்.

'இரு நிலனாய்த்தீயாகி, நீருமாகி, இயமானனாயெறியுங்காற்றுமாகி, அருநிலைய திங்களாய் ஞாயிறாகி ஆகாச மாயட்ட மூர்த்தியாகிப், பெருநலமுங் குற்றமும்பெண்ணும் ஆணும் பிறகுருவும்' தம்முருவும் தாமேயாகி நெருநலையாய் இன்றாகி நாளையாகி நிமிர்புன் சடையடிகள் நின்றவாறே.

### புலிகள் மறுப்பு

(வவுனியா)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நோர்வே சென்றுவிட்டதாக வெளிவந்துள்ள செய்திகளை விடுதலைப்புலிகளின் வட்டாரங்கள்மறுத்துள்ளன.

அன்ரன் பாலசிங்கம் நோர்வே சென்றுவிட்டதாக சில பத்திரிகைகளிலும் வானொலிகளிலும் வெளியான செய்திகளை மறுத்துள்ள விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் அவர் இலண்டனில் இருந்து சமாதானமுன்னெடுப்புக்கான நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறார் எனத் தெரிவித்துள்ளன. (உ-4)

# பவள விழா காணும் சிவராமலிங்கம்பிள்ளை

# என்றும் உறுதி தளராத உத்தம பண்பாளர்

**இரா. செல்வவடிவேல்**

மனம், மொழி, மெய் ஆகிய மூன்றையும தீயவழியில் செல்ல விடாதவர்கள சான்றோர்கள். ஆசான் க. சிவராமலிங்கம்பிள்ளை அவர்கள் சான்றாண்மைப் பண்புகள் அனைத்தும் சார்ந்த ஒரு கடல் எனக் கூறினால் மிகையாகாது. உலகத்தை அழிப்பதற்குரிய பிரளயமே ஏறபட்டாலும், தம் அறநெறியிலிருந்து அணுவளவும் மாறாத தன்மை கொண்டவர்களைக் காண்பது என்பது பெரும் பேறாகும். எத்தகைய உயர் இடத்தில் இருந்தாலும் அவர்களின் கருத்துக்கள் தவறாயின் தயங்காது அவற்றை எதிர்த்து தமது கருத்தைக் கூறக்கூடியவர் சிவராமலிங்கம் பிள்ளை அவர்கள். போக விட்டுப் புறஞ் சொல்லாப் பெரியார். ''HALLO; COME; வாடாப்பா; எங்க காண வில்லை'' இவை ஆசான் வரவேற்புக் கூறும் வார்த்தைகள். முக மலர்ச்சியுடன் அனைவரையும் உயர்வு. தாழ்வு பாராமல் இன்மொழி கூறி வரவேற்கும் பெருந்தகை.

### ஒழுக்க சீலர்

ஒழுக்கத்தில் குன்றின்மேல் இட்ட விளக்காகத் திகழ்பவர் சிவராமலிங்கம்பிள்ளை அவர்கள். ''ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்'' என்றான் ஐயன் வள்ளுவன். உயிராக ஓம்பப்படும் என்று கூறாதது கவனிக்கப்பட வேண்டும். வள்ளுவரின் இவ் வாய் மொழிக்கு இலக்கியமாக விளங்குபவர்களில் ஆசானும் ஒருவராவார்.

முச்சக்கர வண்டியில் ஊர்ந்து வரும் அவர் மற்றவர்களுக்கு உதவும் கரமாக திகழ்பவர். யார் வந்து உதவி கேட்டாலும் தன்னால் முடிந்ததை செய்வார். மின்சாரக் கட்டணம் செலுத்துவதற்கும், மின்சாரம் தடைப்பட்டால் அறிவிப்பதற்கும் சிவராமலிங்கம் பிள்ளை மாஸ்டர் தான் தேவை. அவரது சிரமத்தைப் பறறி இம்மியளவும் சிந்திக்காது ''நீங்கள் போனால் தான் உடனே செய்வார்கள்'' என்று கூறும் அயலவர்கள்! ஊரின் நடுவில் பழமரம் எங்கள் ஆசான்!

### பள்ளியும், பஞ்சாங்கமும்

யாழ்ப்பாணச் சமூகம் பற்றி ''பள்ளியும் பஞ்சாங்கமும் தானடா இவர்களை உருப்படாமல் செய்து விட்டது'' என்பார். பள்ளியையும், பஞ்சாங்கத்தையும் மட்டும். நபயி உழைப்பை உதாசீனப்படுத்துபவர்களைக் கண்டிப்பதில் நக்கீரனாகத் திகழ்பவர் எம் ஆசான்! நாமே நமக்கு அமைத்துக் கொண்ட பாதைகள், நம் பயணத்தை தடுத்து நிறுத்துமானால் பாதை அகலப் படுத்தப்படல் வேண்டும். அல்லது அகற்றப்பட வேண்டும். இக்கருத்துடன் உடன்பட்டு நின்று மூடப்பழக்க வழக்கங்களை துணிவுடன் நிராகரிப்பதை பல சந்தர்ப்பங்களில் நேரில் கண்டு வியப்படைந்துள்ளேன்.

### உயர்ந்த அறிவு

தகவல்களை நிறைய வைத்திருப்பவர்கள், நிறையப்பட்டம் பெற்றிருப்பவர்கள். இவர்கள் எல்லாம் அறிஞர்கள் என்று பிழையாகக் கருதிக் கொண்டிருக்கிறோம். இவர்களில் அறிஞர்கள் இருக்கலாம், தேடிக் கண்டு பிடிக்க வேண்டும். உலகத்தை உனக்கு உரியதாக்கி கொள்வதே அறிவு! மகிழ்ச்சியைக் கணடு சிரிப்பதும், மனத் துயரைக் கண்டு அழுவதும் இல்லாமல் ஒரு தன்மையாக விளங்க முயல்வதே உயர்ந்த அறிவு ஆகும். துன்பம் வந்த போது சிரிப்பது என்பது சுலபமானதல்ல! திருமணமாகி சில மாதங்களிலேயே நடக்க முடியாத நிலை; புத்திர சோகம்.... இந்தத் துன்பங்கள் மட்டும் போதும் ஒருவனை மூலையில் முடங்க வைப்பதற்கு! ஆசான் தன் வாழ்வின் துன்பங்களை கடந்த முறை அறிஞர்களுக்கு உரிய சிறப்பினை உணர்த்துவதாக அமைந்துள்ளது. இப்படியும் ஒரு மனிதனா? என்று பல தடவை விழி பிதுங்கி நின்றிருக்கிறேன்.



### ஆங்கிலமொழி புலமை

நமது நாட்டில் ஆன்மீகச் சிந்தனை திசைமாறிச் செல்கிறது. ஆடம்பரத்தின் அணிகலனாக ஆன்மீகம்மாறி வருவது வேதனை தருவதாகவுளளது. கீதை கூறும் ''கடமையைச்செய் என்பது தான் ஆன்மீகம். ஒருவர் செய்யும் தொழிலை சிறப்பாகச் செய்கிறாரோ அவர் சிறந்த ஆன்மீகவாதியாவார். ஆசான சிவராமலிங்கம் பிள்ளை அவர்கள் இன்றும் ஆசிரியராக தனது கடமையைச் செய்து வருபவர். அகவை எழுபத்திஐந்தை அடைந்தாலும் கல்விக்காக தன்னிடம் வருபவர்களுக்கு உதவி செய்து வருவதைக் காண முடிகிறது. தமிழை விட ஆங்கில மொழிக் கல்வியை லாவண்யமாக கற்பிப்பார். பல்கலைக்கழக மாணவர்கள் ஆங்கிலப் பாடம் கேட்க இன்றும் அணிவகுத்து நிற்பதைக் காணும் பொழுது, செய்யும் தொழிலே தெய்வம்' எனக் கருதும் ஆன்மீக சிந்தனையாளரை காண முடிகிறது.

### வள்ளுவர் வழி

வான்மறை வள்ளுவன் கூறிய வாழ்க்கை நெறிகளைக் கடைப்பிடித்து வாழும் வாய்மையாளர் எங்கள் ஆசான். பண்புடைய பெருந்தகைகள் சிலர் இவ்வுலகில் இருப்பதால்தான், இவ்வுலகம் இன்றும் அழியாமல் இருக்கின்றது இல்லையென்மால் இந்நேரம் அது மண்ணோடுமண்ணாகியிருக்கும். எல்லோரிடமும் அன்பாக இருத்தல், நீதியையும் நன்மையையும் நெஞ்சாலே விரும்பி பிறர்க்கு உதவும் பெரும்பண்பு, ஒருவனை இகழ்ந்து உரைக்காத நல்ல தன்மை சிறந்த நண்பனாகப் பழகுதல் போன்ற மனித நேயங்களை உடையவர் எங்கள் வசிட்டர்.

பண்பு உடையார்ப்பட்டு,
உண்டு உலகம், அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மண்.
குறள்- 996

## அமைச்சருக்கு கடிதம்

[யாழ்ப்பாணம்]

வேலணை அராலித்துறையில் பொது மக்களின் விருப்பத்திற்கு மாறாக கொல்களம் அமைப்பதற்கான முன்னோடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றமையை கண்டித்து அகில இலங்கை திருக்குறிப்புத் தொண்டர் சபையின் வேலணைக்கிளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துளளது. (உ)

## நிபந்தனையுடன் நிதியுதவி

[கொழும்பு]

பல்வேறு கட்டுப்பாடுகளுடன் சர்வதேச நாணய நிதியம் இலங்கை அரசுக்கு 2ஆயிரத்து 500 கோடி ரூபாவை அரசுக்கு கடனாக வழங்கியுளளது.

இந்தகடனுதவியை 18மாத காலத்திற்குள் திருப்பிச் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் இந் நிதி வழங்கப்பட்டுள்ளது (உ-5)

## நூல் வெளியீடு

[யாழ்ப்பாணம்]

எம் ஷாந்தன் சத்தியகீர்த்தியின் 'கலைஞானியும் கலைத் தொண்டும்' நூல் வெளியீட்டுவிழா வரும்வெள்ளிக்கிழமை 9ஆம் திகதி மு ப 9 30 மணிக்கு வயாவிளான் மத்தியமகா வித்தியாலயத்தில் இடம் பெறவுளளது.

ஆ.சிநடராஜா தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில், நூல் வெளியீடு மற்றும் ஆய்வுரையை ஓய்வு பெற்ற கல்விப்பணிப்பாளர் கோ. சி. வேலாயுதம் நிகழ்த்துவார். (உ-106)

## திரைப்படக் காட்சி

[யாழ்ப்பாணம்]

சீரடிசாயி பாவின் பிறப்பு அற்புதங்கள் குறித்த திரைப் படக்காட்சி எதிர்வரும் 6ஆம் திகதி பிற்பகல் 2 00 மணிக்கு யாழ்ப்பாணத்தில் செயற்படும் பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையததில் இடம் பெறவுள்ளதாக மேற்படி நிலையத்தினர் தெரிவித்துள்ளனர். [க-104]

## பவள விழா நல்வாழ்த்து

சிவராம லிங்கம் சிறப்பாக வாழ்ந்த
தவமே ''பவளவிழாத்'' தான்காண்- இவரினிமேல்
செய்சேவை செந்தமிழில் சீர்சைவம் மேலோங்கச்
செய்யவேள் செய்வான் சிறப்பு
புங்குடு தீவிலோர் பொறப்பதியில் போற்றுபுகழ்
மங்களஞ்சேர் வைத்தியர் மாண்புநிறைச்- சங்கை
உடையான் கணபதிப் பிள்ளைதுணை செல்லம்
அடைந்தனரே அன்புமகனாய்
பார்புகழும் பாரத நாடு தமிழகத்தில்
நேர்பட்டம் நீள்கலையில் நீர்பெற்றீர்- பாரீழம்
மேவு தமிழ் யாழ்மண் தலைநகரின் 'இந்துவிலே'
சேவைகுரு வாய்நின்றீர் சீர்
ஆசையறும் அன்புள்ளம் ஆண்டு பலவாக
நேசம் அணிதமிழ்மேல் நேர்சைவம்- வீசுபுகழ்
ஆண்ட வனின் நல் லருளால் அறிவுவளர்
பூண்டபுகழ் தான் பெறு வீர்
பட்டிமன் றம்பார் மகிழவே மேடைப்பேச்
சட்டதிக் கெல்லாம் கருத்தரங்கு- இட்டமுடன்
ஆய்வுரைகள் அத்தோடெம் கம்பன் கழகத்தில்
வாய்ப்பீந்தாய் போஷகராய்.
வாழ்க ''சிவராம லிங்கத்தார்'' வாழ்க மனை
வாழ்க இவரன்புப் புத்திரரும்- வாழ்கவே
செந்தமிழும் ஆஸ்திகமும் சீர்சேர் தமிழ்க்குலமும்
எந்தப் பொழுதும் இனிது.

கச்சாயூர்ப்பண்டிதர்
**கவிஞர் ''சுகசீலன்''**

## கண்ணிவெடி பாதிப்பு குறித்து கண்காட்சி

(கொழும்பு)

கண்ணிவெடிப் பாவனையால் உள்நாட்டிலும் உலக நாடுகளிலும் ஏற்பட்டு வரும் பாதிப்புக்கள் குறித்து, நடமாடும் புகைப்படக் கண்காட்சியை, கண்ணி வெடிகள் தடைக்கான இலங்கை அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது.

எதிர்வரும்மே மாதம் இக் கண்காட்சி இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

## வடக்கு- கிழக்கில் அரச ஊழியரின் கடமை நேரத்தை வலியுறுத்தும் சுற்று நிருபம்

[யாழ்ப்பாணம்]

வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள அரச உத்தியோகத்தர்களின் கடமை நேரம், மதியபோசன இடைவேளை நேரம் என்பன உரிய முறையில் கடைப்பிடிக்க வேண்டியதனை வலியுறுத்தி வடக்குமாகாண பொது நிர்வாக அமைச்சு, சகல அரச திணைக்களங்கள், அலுவலகங்களுக்கும் சுற்று நிருபம் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளது.

இதன் பிரகாரம், மதிய போசன இடைவேளையை அரை மணித்தியாலம் மட்டுமே கடைப்பிடிக்க வேண்டும் எனவும்,

உணவு வேளைக்கான நேர அட்டவணை தயாரித்து உடனடியா அமுல்ப்படுத்த வேண்டும் எனவும் இவ் ஒழுங்கு கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்பதை பொறுப்பாளர்கள் கண்காணிக்க வேண்டும் எனவும் வடக்கு - கிழக்கு மாகாண பொது நிர்வாகமும், உள்ளூராட்சி, கூட்டுறவு, கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, கைத்தொழில் அமைச்சின் கடிதத் தலைப்புடன் சகல அமைச்சின் செயலாளர்கள், ஆளுநரின் செயலர், பிரதிச் செயலர், திணைக்களத் தலைவர், பிரதேச செயலர் ஆகியோருக்கு முகவரியிட்டு சுற்று நிருபம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி 25 ஆம் திகதி வடக்கு - கிழக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சில் இடம்பெற்ற கூட்டத்தில் இது தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்டதையடுத்தே பெப்ரவரி 16 ஆம் திகதியிட்டப்பட்டு மேற்படி சுற்று நிருபம் அனுப்பிவைக்கப்பட்டுளளது. (உ-42)

## எமது நாட்டுப்பிரச்சினையை பிரித்தானிய அரசால் தீர்த்து வைக்க முடியாது

(கொழும்பு)

பிரித்தானிய அரசினால் எமது நாட்டுப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க முடியாது.

ஆனால் தமிழீழவிடுதலைப் புலிகளைத் தடைசெய்தது அந் நாட்டின் உள்நாட்டு விவகாரமெனப்பிரதமர்ரட்ணஸ்ரீ விக்கிரமநாயக்கா களுத்துறைப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற வைபவத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்,- பிரித்தானியா விடுதலைப்புலிகளைத் தடை செய்தாலும் எமது பிரச்சினையை நாமே பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும், பிரித்தானியா தனது விவகாரங்களை மட்டும் கவனித்துக் கொள்ளட்டும் என்றும் கூறியுள்ளார்.

இதேவேளை, கடந்த பெப்ரவரி மாதத்திற்குள் 10 ஆயிரம் இளைஞர்களை இராணுவத்தில் சேர்த்துக்கொள்ளும் திட்டம் வெற்றியளிக்காமை தொடர்பாக படை அதிகாரிகளுடன் கலந்துரையாட முடிவு எடுத்துள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார். (உ-5)

# செய்தித் துளிகள்

## மூவர் கைது

(கொழும்பு)

கொழும்பு மாளிகாவத்தை ரயில்வே வேலைத்தளத்தில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் மூவரை பொலிஸார் நேற்று முன்தினம் கைதுசெய்துள்ளனர். (உ-9)

## கட்டுடையில் கைக் குண்டுகள் மீட்பு

(கொழும்பு)

படையினர்க்கு கிடைத்த தகவல்களைஅடுத்து மானிப்பாய் கட்டுடை பகுதியில் தேடுதல் நடத்தியதில் 9 கைக் குண்டுகள் கைப்பற்றப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டதாகவும்,

இதேநாளில் கோப்பாய் தெற்குப் பகுதியில் டாங்கி அழிப்பு கண்ணிவெடிஒன்று கைப்பற்றப்பட்டதாகவும் விசேடஊடகத்தகவல்மையம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

## கட்டட திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

கொக்குவில்கிழக்கு இராமகிருஷ்ண வித்தியாசாலையின் புதிய வகுப்பறைக் கட்டடத் திறப்புவிழா நேற்றுமுன்தினம் பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது.

கட்டடத்திறப்புவிழாவைத் தொடர்ந்து இராமகிருஷ்ணரின் 166 வது ஜெயந்தி விழாவும் கொண்டாடப்பட்டது.

இந் நிகழ்வுகளில் நல்லூர்ப் பிரதேச சபைத் தலைவர் கா மணிபல்லவராஜன்பிரதம விருந்தினராகவும் பேராசிரியர் செ சிவஞானசுந்தரம், சுவாமி சித்ரூபானந்தா ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். (உ-104)

## சிவசக்தி அநுபூதி நூல் வெளியீடு

[யாழ்ப்பாணம்]

யாழ். இந்து சமயப் பேரவையின் செயலாளர் சி சக்திகிரீவன்யாத்த சிவசக்தி அநுபூதி நூல் வெளியீட்டு விழா வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 3 மணிக்கு சண்டிலிப்பாய் சீரணி ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோயிலில் இடம் பெறவுள்ளது.

உடுவில் பிரதேச செயலர் ஆ.மகாலிங்கம் தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில் வரவேற்புரையை சைவப் புலவர் சொ. கோவிந்தராஜா, தொடக்கவுரையை பேராசிரியர் செ பாலச்சந்திரன் ஆகியோர் நிகழ்த்துவர்.

ஆசியுரைகளை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், சிவஸ்ரீ தி.பாலசுப்பிரமணியக்குருக்கள் மற்றும் வாழ்த்துரைகளை இந்து சமயப் பேரவைத் தலைவர் அருட்கவி சீ விநாசித்தம்பி, த பரம்சோதி ஆகியோர் நிகழ்த்துவர்.

நூல் வெளியீட்டுரையை யா/ பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் ஆற்றுவார். (உ)

## மாதாந்த உதவிப்பணம்

(ஆவரங்கால்)

கோப்பாய்பிரதேச செயலர் பிரிவில் இம்மாதம் இரண்டாம் வாரத்தில்இருந்து, மேலும் 450 பேருக்கு பொதுசன மாதாந்த உதவிப்பணம் வழங்கப்படவுள்ளது. (உ-57)

## திருட்டு

[யாழ்ப்பாணம்]

திருநெல்வேலிப் பகுதியில் அண்மைக்காலங்களில் திருட்டுக்கள் அதிகரித்து வருகின்றன.

இந்த வகையில் அண்மையில் இப்பகுதியில் ஜெகதீஸ்வரன் என்பவரது வீட்டின் முற்றத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டி களவாடப் பட்டுள்ளது. (உ-10)

## பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம)

யாழ். மறைமாவட்ட சமூகத் தொடர்பு சாதன ஆணைக்குழு நடத்தும் ஊடகவியலுக்கு ஓர் அறிமுகம் பயிற்சிப் பட்டறை நிகழ்வின் இறுதி நாளான இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு தொடக்கவுரையைத் தொடர்ந்து திரைப்படத் திறனாய்வு எனும் பொருளில் யாழ். பல்கலைக்கழக பொருளியல் துறைத் தலைவர் வி. பி. சிவநாதன் கருத்து வழங்கவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து பொது அமர்வு, பயிற்சியாளர் பகிர்வு, பயிற்சியாளர் மதிப்பீடு, நெறியாளர் அறிக்கை ஆகிய நிகழ்வுகள் இடம்பெற்று பிரதம விருந்தினர் உரையுடன் நிகழ்வு நிறைவில் சான்றிதழ் வழங்கல் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (செ)

## செயலகத்தில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ரீதியாக நடைபெற இருக்கும் விளையாட்டுக்கள சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 13 ஆம் திகதி காலை 9 00மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ் மாவட்டத்தில் உள்ள சகல பிரிவு விளையாட்டு உத்தியோகத்தர்களையும் கலந்துகொள்ளும்படி யாழ் மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ எவ் ஜேரூபசிங்கம் கேட்டுள்ளார். (க-2-6)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மறைமாவட்ட மரியாயின் சேனையின் மாதாந்த கொமிசியக் கூட்டம் இன்று மு. ப. 10 00மணிக்குமறைக் கல்வி நடுநிலைய மண்டபத்தில்தலைவர்எம் ஏ பிரகாசராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (உ)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/இளவாலை றோ.க.த. கலவன் ஆரம்பபாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை திங்கட்கிழமை பாடசாலை அதிபர் - இம்மனுவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ்/ இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் கலந்து கொள்வார் (உ-2, 6)

## ஆஞ்சநேயர் ஆலயம்

(ஆவரங்கால்)

வல்லை முனியப்பர் ஆலயத்திற்கு அருகாமையில்ஆஞ்சநேயர் ஆலயம் அமைக்கும் பணிகள் இடம் பெற்று வருகின்றன. [உ-57]

# புலிகளுக்கு அரசு கெட்ட பெயரை ஏற்படுத்தி விட்டது கவலையே

## மன்னார் ஆயர் தெரிவிப்பு

(கொழும்பு)

பேச்சுவார்த்தைகளின் மூலம் சமாதானம் ஏற்படுவதை விரும்பி ஜனநாயக வழியை நாடிய புலிகளுக்கு, அரசாங்கம் கெட்ட பெயரை ஏற்படுத்திவிட்டது'.

இவ்வாறு மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப்பு கவலை தெரிவித்துள்ளார்.

சமாதான முயற்சிக்கு தடையினை விளைவிக்கும பிரிட்டனின் தடை அறிவிப்பு மிகவும் வேதனைக்கு உரியதாகும்.

விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைக்கு தமது நல்லெண்ணத்தை காண்பித்து வரும் இவ்வேளையில் பிரிட்டனின் இவ் அறிவிப்பு அதிர்ச்சியளிக்கின்றது

உலக நாடுகளின் அன்பு மனதை நம்பி தமக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் விடுதலைப் புலிகள் அக்கறையுடன் சமாதான முயற்சியில் ஈடுபட்டனர்.

ஆனால் இத்தடையானது உலக நாடுகளின் வாக்குறுதிகள் செயல்வடிவம் பெறுமா? என்ற சந்தேகத்தைஏற்படுத்தியுள்ளது.

பேச்சுக்கு விடுதலைப் புலிகள் வரும் போது விதிக்கப்பட்டுள்ள இத் தடையினால் தம்மை ஓரங்கட்டியவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறோம் என்ற உணர்வு அவர்கள் மத்தியில் ஏற்படும்.

ஏனைய தமிழ்க்கட்சிகளை தடை செய்யாது ஏற்றுக் கொண்டது போல பேச்சுவார்த்தைக்கு முன்வந்து ஜனநாயக வழியை நாடும் விடுதலைப்புலிகளையும் அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும்.

மாறாக புலிகளை பயங்கரவாதப்பட்டியலில் சேர்க்க வைத்துள்ளது.

இத்தகைய செயற்பாடு அரசின் மேலுள்ள நம்பிக்கையை மேலும் இறுக்கமடையச் செய்யும்.

இவ்வாறு ஆயர் மேலும் தெரிவித்துள்ளார். (செ)

## இராசி பலன்

4-03-2001

[மாசி 20, ஞாயிறு]

நவமி பி.ப 1.08 வரை

மிருகசீரிடம் மு.ப 10 55 வரை

ராகுகாலம் 4 57- 6.27

சுபநேரம் 9 27- 10 57

மரணயோகம்.

**மேடம்**
காரிய வெற்றி, அன்னியர் சந்திப்பு, வாக்கு மேன்மை, சந்தோசமான சம்பவம்.

**இடபம்**
வாக்குக் கலகம், பொருள் விரயம், கௌரவக் குறைவு, நல்லோர் நட்பு.

**மிதுனம்**
ஆதாயம், சுபநிகழ்ச்சி, ஜனவசியம், சயன சுகம்.

**கடகம்**
பிரயாணம், உணர்ச்சிவசப்படல், சுப செலவு, அலைச்சல்.

**சிங்கம்**
நண்பர்கள் சந்திப்பு, தனலாபம், சுபகாரியம், காரியம் கைகூடும்.

**கன்னி**
திடீர் மகிழ்வு, தொழில் சிறப்பு, அதிகார நிலை, முயற்சி வெற்றி.

**துலாம்**
மருந்துண்ணல், கட்டுப்பாடு, பிரயாணம், காரிய தாமதம்.

**விருச்சிகம்**
உறவினர் வெறுப்பு, அமைதிக் குறைவு, வீண் தகராறு, முயற்சி தடங்கல்.

**தனுசு**
போசன சுகம், வாகன வசதி, காரியம் கைகூடும், கலந்துரையாடல்.

**மகரம்**
கேளிக்கை, தொழில் விருத்தி, முயற்சி ஜெயம், நோய் குணமடைதல்

**கும்பம்**
முயற்சி தாமதம், விருந்துண்ணல், தாழ்வு நிலை, அலைச்சல்.

**மீனம்**
சுற்றுலா, நம்பிக்கைக் குறைவு, பயந்த சுபாவம், காரியம்மந்தம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## ஆலயத்தின் அருகாமையில் மினிசினிமா திரையரங்கா?

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி தெற்கு கந்தசுவாமி கோவில்ஆலயத்திற்கு மிக சமீபமாக மினி சினிமா திரையரங்கு ஆரம்பிப்பதற்கான முன் முயற்சிகள் வெகு துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக அப்பகுதி பொதுமக்கள் புகார் தெரிவித்துள்ளனர்

இக் கைங்கரியத்திற்கு இப்பகுதி அரச திணைக்களத்தினரும், இவ் ஆலய நிர்வாகிகள் சிலரும் உடந்தையாக இருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

ஆலயத்திலிருந்து சுமார் 300 மீற்றர் பிரதேசத்தில் சினிமா திரையரங்குகள் அமைக்கப்படக் கூடாதென்பது விதியாக இருக்கின்றபோதிலும், இதுபோன்ற செயற்பாட்டிற்கு ஆலயத்துடன் தொடர்புடைய சிலரும ஒத்துழைப்பு வழங்குவது குறித்து பொதுமக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

ஆலய சுற்றாடலில் பக்திச் சூழலைக் கெடுக்கும் எந்த செயற்பாடும் முன்னெடுக்கப் படக்கூடாது என்பதே இந்து சமய அபிமானிகளின் ஏகோபித்த கருத்து என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

## படையினரிடம் சிக்கிய யுவதிகள் இருவர்

(யாழ்ப்பாணம்)

இராணுவ முகாம் சுற்றாடல பகுதியில் தேங்காய் திருடிய இரு யுவதிகள் இராணுவத்தினரிடம் வசமாக மாட்டிக் கொண்ட சம்பவம் நேற்று முன்தினம் முற்பகல் 11. 00 மணியளவில் ஓட்டுமடம் இராணுவ தடைமுகாமில் இடம்பெற்றுள்ளது.

பிரஸ்தாப யுவதிகள் இருவரும் கைகள் கட்டப்பட்ட நிலையில் பொதுமக்கள் பார்வைக்காக நிறுத்தப்பட்ட பின்னர் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர். (க-121)

## கடிகாரக் கடத்தல் முறியடிப்பு

(கொழும்பு)

பல இலட்சம் ரூபா பெறுமதியான கடிகாரங்களை இலங்கைக்கு கடத்தி வர மேற்கொள்ளப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.

கொங் கொங்கிலிருந்து கடத்தி வரப்பட்ட இக் கடிகாரங்களை சுங்க அத்தியட்சகர்கள் கைப்பற்றியுள்ளனர்.

புறக்கோட்டையில் உள்ள வர்த்தகர்களுக்கு இக் கடிகாரங்கள் கடததப்பட்டதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (உ-3)

## ஐந்து பிள்ளைகளின் தந்தை தற்கொலை

[ஊர்காவற்றுறை]

ஐந்து பிள்ளைகளின்தந்தை ஒருவர் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் ஊர்காவற்றுறை கரம்பன் கிழக்கில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பஸ்ரியான்யோசப் [வயது-52] என்பவரே தற்கொலை செய்து கொண்டவராவர்.

வாழ்வில் ஏற்பட்ட விரக்தியே இவரது தற்கொலைக்கு காரணம் எனக் கூறப்படுகிறது. [க-75]

## விசாரணைகளுக்கென அழைத்துச் சென்றவர் சடலமாக ஒப்படைப்பு

(மன்னார்)

விசாரணைகளுக்கென கடற்படையினரால் அழைத்துச் செல்லப்பட்ட குடும்பஸ்தர் சடலமாக மன்னார் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட சம்பவம் கடந்த புதனன்றுஇடம் பெற்றுள்ளது.

கடந்த புதனன்று இரவு 9. 30 மணியளவில் வீட்டில் படுத்திருந்த கணபதிப்பிள்ளை உதய குமார் (வயது 42) என்ற மேற்படி குடும்பஸ்தரை தாராபுரம் கடற்படையினர் அழைத்துச் சென்றதாகவும்.

இரவு 1. 30 மணியளவில் சடலமாக மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

கொடிகாமத்தைச் சொந்த இடமாகக் கொண்டமேற்படி நபர் கடந்த சில வருடங்களாக மன்னார்சாவற்காட்டு பகுதியில் வசித்து வருகிறார்.

இவரது மரணத்திற்கு காரணம், பலமாகத் தாக்கப்பட்டமையே என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ)

## இன்று ஒரு தகவல்

# எந்த வகையான உணவு எமக்கு நன்மையளிக்கும்?

உணவு வகைள் சாத்வீக மானவை, ராஜஸ உணர்வைத்தூண்டுபவை, தாமஸ உணர்வை ஏற்படுத்துபவை என்று மூன்று வகைப்படும். பழங்கள,பால்,பருப்பு வகைகள,தேன் போன்றவை சாத்வீகமானவை. இவற்றில் நம் உடலுக்கு நன்மை செய்யக் கூடிய பொருள் ஏதேனும் ஒன்று நிச்சயமாக உண்டு. இவற்றைக் குழந்தைகளுக்கும் கொடுக்கலாம்,வயதானவர்களுக்கும் கொடுக்கலாம்.

அடுத்ததாக ரஜோ குணத்தை உண்டாக்கக் கூடிய ஆகாரவகைகள் இருக்கின்றன. புளிப்பு, காரம், துவர்ப்பு,வாசனைப்பொருள்கள் ஆகியவை நிறைந்த உணவு இவை. இவற்றைச் சாப்பிடுவதால் மனதுக்கு அமைதி கிடைப்பதில்லை. புலி அழகாக இருக்கிறது உடல் வலிமையுடன் தாவிப் பாய்ந்து வருகிறது. ஆனால் அதை நாம் பாராட்டிச் சீராட்டுகிறோமா.

ராஜச உணவு நமது உடல் வலிமையை விறுவிறுப்பாக்கும். ஆனால் அவற்றைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தால் நம்முடைய மனதிலும் புலியின் உணர்வைப் போன்ற கூடுதலான எண்ணங்களே ஓடிக் கொண்டு இருக்கும். மூன்றாவது தாமஸ ஆதாரம் சமைத்து மூன்று மணி நேரம் ஒரு யாமம் ஆகி விட்டால் அந்த உணவின் சுவை குன்றி விடும். அதை இறைவனுக்கு நிவேதனம் செய்யும் வழக்கம் இல்லை. பழையது இறைவனுக்குப் படைக்க ஏற்றது அல்ல. பழையதுசாப்பிட்டால் உடம்புக்கு வலுகிடைக்கும் என்றுசொல்வார்கள். ஆனால் பழயைதைச் சாப்பிட்டு விட்டு உட்காந்தால் தூக்கம் தான் வரும். சிரத்தையுடன் எதிலும் கவனம் செலுத்த முடியாது.

ஆகவே நாம்மேலே கூறிய மூன்று வகையான உணவு வகைகளில் சாத்வீகமான உணவே சிறந்தது இயன்ற அளவுக்கு அத்தகைய உணவையே உட்கொண்டு வர வேண்டும். அதுவே நம்முடைய உள்ளத்தையும் உடலையும் பண்படுத்த வல்லது.

தொகுப்பு
க.க. இராமலிங்கம்

# பெண் தலைமையிலான கொள்ளைக் குழு கைது

(கொழும்பு)

பெண் ஒருவரின் தலைமையில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கொள்ளையில் ஈடுபட்டுவந்தகொள்ளைக்கோஷ்டியை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பாளிகாவத்தைப் பகுதியில் அண்மையில்நிகழ்ந்தகொலையொன்று தொடர்பான விசாரணைகளின் போது இக்குழுவின் விபரங்கள் அம்பலமாகியுள்ளன.

மூன்று பெண்கள் உட்பட மொத்தம் ஏழு பேரை உள்ளடக்கிய இந்தக்குழுகொழும்பு அனுராதபுரம், மாத்தறை, மாளிகாவத்தை ஆகிய பிரதேசங்களில் கொள்ளையில் ஈடுபட்டு வந்ததாக தெரிய வந்துள்ளது.

இந்தக் கொள்ளைக் கோஷ்டியினரிடம் இருந்து துப்பாக்கிகள் பணம் வெடி பொருட்கள் என்பனகைப்பற்றப்பட்டுள்ளன. [உ-9)

# மத்திய மாகாண அரச அலுவலகங்களில் தமிழ் எழுதுவினைஞர் நியமனம்

[கொழும்பு]

மத்திய மாகாண அரச அலுவலகங்களில்தமிழ் எழுதுவினைஞர்களை நியமிக்க பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் நிச்சர்ட்பத்திரண தீர்மானித்துள்ளார்.

மத்திய மாகாணத்தில் தமிழ் பேசும் மக்கள் செறிவாக உள்ளதால் அரச அலுவலகங்களில் தமிழ்மொழியில் கடமையாற்ற எழுதுவினைஞர்களை நியமிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ் மொழியும் அரச கரும மொழியாக இருப்பதால் இந்த நியமனங்களை மேற்கொள்வதில் சிரமமில்லை எனவும் அவர் தெரிவித்தார். (உ-8)

# இடத்திற்கிடம்வேறுபடும் தொலைபேசிக் கட்டணம்

[கோப்பாய்]

கோப்பாய், இருபாலை, நீர்வேலி, உரும்பிராய் போன்ற பகுதிகளில் தொலைபேசிக் கட்டணங்கள் இடத்துக்கிடம் வேறுபடுவதாக பாவனையாளர்கள் தரப்பில் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

கூடுதலான நிலையங்களில் உள்நாட்டு தொலைபேசிக் கட்டணமாக பத்து ரூபாவும் சில இடங்களில் எட்டு ரூபாவும் அறவிடப்படுகின்றது.

அத்துடன் இரவுவேளையிலும் ஞாயிற்றுக்கிழமையிலும் நிமிடத்துக்கு ஐந்து ரூபாவும் அறவிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு கூடுதல் கட்டணம் அறவிடப்படுவது ஏன் என பொது மக்கள் தரப்பில் கேள்வி எழுப்பப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.க79

# காயமுற்ற 14 பேர் நட்ட ஈடுபெறுவதில்சிரமம்

(கொழும்பு)

பிந்துனுவெவ புனர்வாழ்வு நிலையப் படுகொலைச் சம்பவத்தில் காயமுற்ற 14 பேரும்,இதற்கான நட்டஈட்டு தொகையைப்பெற்றுக்கொள்வதில் பல்வேறு சிரமங்களினை எதிர் நோக்கி வருகின்றனர். அவர்கள் தொடர்ந்தும் தடுப்பு முகாம்களிலும்,வைத்தியசாலைகளிலும் இருப்பதனாலும் அதிகாரிகளினது அசண்டையீனங்களினாலும் இந்நிலை எழுந்துள்ளது.

இதேவேளை, இச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களுக்கான நட்ட ஈடு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

மார்ச் மாதம்01-ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப் பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகின்றன.

| | |
|---|---|
| 180912 ஏ | 180912 பி |
| 189924 ஏ | 180924 பி |
| 180930 ஏ | 180930 பி |
| 180932 ஏ | 180939 ஏ |
| 180950 ஏ | 130952 ஏ |
| 180952 பி | 180973 ஏ |
| 180973 பி | 180873 சி |
| 180989 ஏ | 181005 ஏ |
| 181005 பி | 181023 ஏ |
| 181023 பி | 181026 ஏ |
| 182890 ஏ | 132903 ஏ |
| 182903 பி | 182903 சி |
| 182903 டி | 182903 ஈ |
| 182921 ஏ | 182953 ஏ |
| 184028 ஏ | 184077 ஏ |

### சாவகச்சேரி

| | |
|---|---|
| 172566 ஏ | 172566 பி |
| 177885 ஏ | 177885 பி |
| 187885 சி | 180540 ஏ |

### யாழ்ப்பாணம்

| |
|---|
| 171444 ஏ |

### கரவெட்டி

| | |
|---|---|
| 171123 ஏ | 142346 ஏ |
| 142346 பி | 142346 சி |
| 142346 டி | 143575 ஏ |
| 143575 பி | 151751 ஏ |
| 151751 பி | 151751 சி |
| 151751 டி | 154966 ஏ |
| 155923 ஏ | 155923 பி |
| 155923 சி | 158364 ஏ |
| 158440 ஏ | 159941 ஏ |
| 159941 பி | 160331 ஏ |
| 160331 பி | 160331 சி |
| 160331 டி | 164646 ஏ |
| 164646 பி | 164646 சி |
| 164646 டி | 165333 ஏ |
| 165333 பி | 165333 சி |
| 167380 ஏ | 167485 ஏ |
| 167485 பி | 167485 சி |
| 168485 டி | 169701 ஏ |
| 169601 பி | 169930 ஏ |
| 169930 பி | 169930 சி |
| 172261 ஏ | 172266 ஏ |
| 172267 ஏ | 172366 ஏ |
| 172366 பி | 172560 ஏ |
| 174416 ஏ | 174416 பி |
| 174632 ஏ | 174632 பி |
| 174632 சி | 176173 ஏ |
| 176173 பி | 176173 சி |
| 176173 டி | 176173 ஈ |
| 176173 எவ் | 176234 ஏ |
| 176234 பி | 176234 சி |
| 176234 டி | 176279 ஏ |
| 177562 ஏ | 177782 ஏ |
| 177782 பி | 177827 ஏ |
| 177872 ஏ | 177873 ஏ |
| 177910 ஏ | 177926 ஏ |
| 177926 பி | 177926 சி |
| 177933 ஏ | 177975 ஏ |
| 178009 ஏ | 178009 பி |
| 178009 சி | 178009 டி |
| 178009 ஈ | 180381 ஏ |
| 180381 பி | 180411 பி |
| 180412 ஏ | 180436 ஏ |
| 180460 ஏ | 180460 பி |
| 180487 ஏ | 180489 ஏ |
| 180500 ஏ | 180503 ஏ |
| 180508 ஏ | 180509 ஏ |
| 180517 ஏ | 180517 பி |
| 180519 ஏ | 184532 ஏ |
| 180533 ஏ | 180533 பி |
| 180533 சி | 180533 டி |
| 180533 ஈ | 180538 ஏ |
| 180539 ஏ | 180543 ஏ |
| 180544 ஏ | 180544 பி |
| 180544 சி | 180551 ஏ |
| 180652 ஏ | 180562 ஏ |
| 180583 ஏ | 180610 ஏ |
| 181056 ஏ | 181059 ஏ |
| 181059 பி | 171065 ஏ |
| 181070 ஏ | 181070 பி |
| 181071 ஏ | 181072 ஏ |
| 181087 ஏ | 181090 ஏ |
| 181109 ஏ | 181131 ஏ |
| 181131 பி | 181131 சி |
| 181131 டி | 181131 ஈ |
| 181134 பி | |
| 181134 ஏ | 181137 ஏ |
| 181137 பி | 181139 ஏ |
| 181337 ஏ | 181344 ஏ |
| 111344 பி | 181344 சி |
| 181344 டி | 181344 ஈ |
| 181397 ஏ | 182246 ஏ |
| 182460 ஏ | 183536 ஏ |
| 183536 பி | 183536 சி |
| 183556 ஏ | 183556 பி |
| 183556 சி | 183583 ஏ |
| 183685 ஏ | 183685 பி |
| 188757 ஏ | 183757 பி |
| 183826 ஏ | 183826 பி |
| 183926 ஏ | |

### கோப்பாய்

| | |
|---|---|
| 177388 ஏ | 177410 ஏ |
| 180634 ஏ | 180634 பி |
| 180634 சி | 180639 ஏ |
| 180639 பி | 180649 ஏ |
| 180650 ஏ | 180650 பி |
| 180650 சி | 180660 ஏ |
| 180811 ஏ | 180811 பி |
| 180858 ஏ | 180858 பி |
| 180858 சி | 180858 டி |
| 180867 ஏ | 180886 ஏ |

### நல்லூர்

| | |
|---|---|
| 170732 ஏ | 170920 ஏ |
| 171413 ஏ | 171415 ஏ |
| 171417 ஏ | 171421 ஏ |
| 171422 ஏ | 171424 ஏ |
| 171425 ஏ | 171427 ஏ |
| 171428 ஏ | 171429 ஏ |
| 171438 ஏ | 171441 ஏ |
| 171443 ஏ | 171446 ஏ |
| 171451 ஏ | 174141 ஏ |
| 17716 ஏ | 1771651 ஏ |
| 177161 பி | 177161 சி |
| 177177 ஏ | 177177 பி |
| 179715 ஏ | 179732 ஏ |
| 179738 ஏ | 179738 பி |
| 179738 சி | 179738 டி |
| 179739 ஏ | 179740 ஏ |

### பருத்தித்துறை

| | |
|---|---|
| 127639 ஏ | 153887 ஏ |
| 153887 பி | 153887 சி |
| 153887 டி | 158171 ஏ |
| 158171 பி | 165156 ஏ |
| 167469 ஏ | 167958 ஏ |
| 168043 ஏ | 168043 பி |
| 169849 ஏ | 169922 ஏ |
| 169923 ஏ | 169923 பி |
| 172362 ஏ | 172362 பி |
| 172362 சி | 176309 ஏ |
| 177739 ஏ | 177739 பி |
| 177739 சி | 177762 ஏ |
| 177762 பி | 177762 சி |
| 177762 டி | 177762 ஈ |
| 177930 ஏ | 177930 பி |
| 177930 சி | 180385 ஏ |
| 180421 ஏ | 180422 ஏ |
| 180534 ஏ | 180555 ஏ |
| 180555 பி | 180555 சி |
| 180555 டி | 180555 ஈ |
| 181088 ஏ | 181104 ஏ |
| 181104 பி | 181106 ஏ |
| 181107 ஏ | 181119 ஏ |
| 181159 ஏ | 181174 ஏ |
| 181299 ஏ | 181299 பி |
| 181299 சி | 181353 ஏ |
| 181353 பி | 182258 ஏ |
| 182439 ஏ | 182439 பி |
| 182471 ஏ | 182471 பி |
| 183281 ஏ | 183754 ஏ |
| 183784 ஏ | 183900 ஏ |
| 185331 ஏ | 185331 பி |
| 185331 சி | 185334 ஏ |
| 185334 பி | 185334 சி |
| 185334 டி | 185334 ஈ |
| 185334 எவ் | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 174052 ஏ | 174052 பி |

### உடுவில்

| | |
|---|---|
| 170733 ஏ | 170735 ஏ |
| 179606 ஏ | 179606 பி |
| 179667 ஏ | 179696 ஏ |
| 179696 பி | 179779 ஏ |
| 179779 பி | 184047 ஏ |
| 184047 பி | 184047 சி |
| 184047 டி | 184050 ஏ |
| 184051 ஏ | 184062 ஏ |
| 184062 பி | 184062 சி |
| 184062 டி | 180063 ஏ |
| 184064 ஏ | 184076 ஏ |
| 184089 ஏ | |
| 180660 பி | 180666 ஏ |
| 180670 ஏ | 180670 பி |
| 180720 ஏ | 180721 ஏ |
| 180739 ஏ | 180739 பி |
| 180756 ஏ | 180779 ஏ |
| 180779 பி | 180779 சி |

# மாநாட்டிற்கு அழைப்பிதழ்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய மகாநாட்டிற்காக சுமார் இரண்டேகால் லட்சம் அழைப்பிதழ்கள் உரியவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

நாளை ஞாயிற்றுக்கிழமை இம் மகாநாடு நடைபெறவுள்ளது. (செ)

# தடகள விளையாட்டு போட்டி

[ஊர்காவற்றுறை]

வேலணைப்பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான வருடாந்த தடகள விளையாட்டுப் போட்டி இரு தினங்களாக நேற்றும் இன்றும் இடம் பெற்றுவருகிறது.

வேலணை பிரதேச செயலர் செ. இரத்தினம் தலைமையில், அல்லைப் பிட்டி சென் பிலிப்ஸ் விளயாட்டுமைதானத்தில் மேற்படி போட்டி நடைபெற்று வருகிறது

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக, யாழ் மாவட்ட மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் கலந்து கொள்கிறார். (செ-75)

# 53 பேர் கைது

(கொழும்பு)

கிறீஸ் மற்றும் பல்கேரியாவுக்குச் செல்லும் நோக்கில் துருக்கி எல்லைக்குள் சட்டவிரோதமாக நுழையமுயன்ற 53 பேரை துருக்கியப் பாதுகாப்புப் படையினர் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ள அனைவரும் இலங்கை சியாராலியோன் ஆப்கானிஸ்தான், ஈராக், ஈரான், அல்ஜீரியா போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-4)

# ஒருவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

எழுதுமட்டுவாள் பகுதியில் படையினரின் தாக்குதலின் போது தமது தரப்பில் ஒருவர் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஈழப் பிரியா குணராசா ராதிகா என்ற போராளியே உயிரிழந்தவராவர். (க 05)

## அதிபர்களுக்கான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் வருடாந்த நாட் காட்டிப்பிரகாரம் எதிர் வரும் 7 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு இடம்பெறுமென அப்பகுதி வலயக் கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை விண்ணப்பங்கள் தயாரிப்பது தொடர்பாக மேற்படி கூட்டத்தில் விளக்கமளிக்கப்படுமென்றும் அவ் விளக்கத்தின் பின்னரே படிவங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க)

# நால்வரிடம் தண்டப்பணம் அறவீடு

(கொழும்பு)

காலியில் இடம்பெற்ற இலங்கை இங்கிலாந்து அணிகளுக்கிடையிலானமுதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணியின்துடுப்பாட்ட வீரர்களின் ஆட்டமிழப்புகள் குறித்து அதிக முறைப்பாடுகளை நடுவரிடம் தெரிவித்ததற்காக இலங்கை அணியைச் சேர்ந்த நால்வரிடம் தண்டப் பணம் அறவிடப்பட்டுள்ளது (உ-10)

# இன்று தியானப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் செயற்படும் பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலைய இளைஞர் பிரிவினர் மாதந்தோறும் நடத்தி வரும் தியானப் பயிற்சி இன்று காலை 7மணிக்கு நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (க- 104)

# அமெரிக்காவில் மீண்டும் பூமி அதிர்ச்சி
# 2 மில்லியன் டொலர் சொத்து சேதம்

## தகவல் நிலையம் தெரிவிப்பு

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் சேற்றன் நகரில் கடந்தவியாழக்கிழமை இடம்பெற்றகடும்பூமிஅதிர்ச்சியில் கட்டிடங்கள் பெருமளவில் சேதமடைந்ததாகவும், 368 பேர் காயமடைந்ததாகவும் அமெரிக்க சுயாதீன தகவல் நிலையம் ஒன்று நேற்று தெரிவித்தது.

அத்தகவல் நிலையம் மேலும் தெரிவிக்கையில்; காயமடைந்தோரில் சுமார் 10 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் 2 மில்லியன் டொலர் பெறுமதியான சொத்துக்கள் சேதமடைந்ததாகவும் தெரிவித்துள்ளது.

1949 ஆம் ஆண்டுக்குப்பின்னர் அமெரிக்காவில் ஏற்பட்ட மிகப் பெரும் நிலஅதிர்வு இதுவென வர்ணிக்கப்படுகிறது.

தென் அமெரிக்கா எல் சல்வடோர், மற்றும்போட்லண்ட், சியாட்டல் போன்ற நகர்களில் ஏற்கனவே நில அதிர்வு ஏற்பட்டமை ஏற்கனவே தெரிந்ததே. (க-7)

# பிஜியின் இராணுவ இடைக்கால அரசு சட்டவிரோதமானது என தீர்ப்பு

(சுவா)

பிஜியின் இராணுவஆதரவு இடைக்கால அரசாங்கம் சட்டவிரோதமானது என மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இதனால் மீண்டு அங்கு இனக்கலவரம் ஏற்பட வாய்ப்பேற்படலாம்என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனினும் நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு பின்பும் பிஜியின் தலைநகரில் எந்தவித அசம்பாவிதங்களும் இடம்பெறவில்லை என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐந்து சர்வதேச நீதிபதிகள் இணைந்து அளித்த மேற்படி தீர்ப்பில பாராளுமன்றம் 6 மாதங்களுக்கு மட்டுமேஇடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. [உ-3]

# ஜேர்மன் பிரமுகருக்கு எதிராக வழக்கு தாக்கல்

(பேர்லின்)

ஜேர்மனியின் முன்னாள் தலைவர் சில்வஸ்ரர் கோலிற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பல மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருட்களை இவர் பதவியில் இருந்த போது பெற்றுக் கொண்டதாக கூறியே இவ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

அரசு தரப்பு வழக்கறிஞர்கள் கோல்மீதும் மற்றும் அவரது கட்சியான கிறிஸ்தவ ஜனநாயக சங்கம் அரசு நன்கொடைகளுக்கு எதிராக நடத்தப்படும் விசாரணையை கைவிட வேண்டும் என்ற கோரிக்கைக்கு மேற்படி நீதிமன்றம் ஒத்துக் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில் இவ் வழக்கில் குற்றத்தை நிரூபிக்க தேவையான தெளிவான ஆதாரம் இல்லை என்பதால் இம்முடிவை எடுக்க வேண்டியுள்ளதாக இவ் வழக்கின் நீதிபதி குறிப்பிட்டுள்ளார். (க-7)

## அவுஸ். அணி சாதனை

அவுஸ்திரேலிய அணி உலகக் கோப்பையை வென்றதுடன் தொடர்ந்து 15 டெஸ்ட் போட்டிகளில் வென்று உலக சாதனையைப் படைத்துள்ளது.

கடந்த 27 ஆம் திகதி மும்பையில்இந்தியஅணியுடனான டெஸ்ட் போட்டியிலும் வென்று தொடர்ந்து 16 போட்டிகளில் வென்று ஒரு வலுவான அணியென்பதை நிலை நிறுத்திக் காட்டியுள்ளது.

பிரட்மனின் கனவை நினைவாக்குவோம் என்ற உறுதியுடன் இன்னும் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணியுடன் அவுஸ்திரேலிய அணி விளையாடவுள்ளது, (உ-10)

## செய்திப்பரல்

★ அல்டுமராஸ் என்ற தனியார் பத்திரிகை வெளியான ஒரு மணி நேரத்தினுள் 75ஆயிரம் பிரதிகள விற்கப்பட்டுள்ளன.

★ எல்சல்வடோரில்கடந்த புதனன்று 5.6ரிச்டர் அளவைகொண்ட பூமி அதிர்வு ஏற்பட்டுள்ளது.

★ போர்னியோவில் கலகம் செய்பவர்களைக் கண்டவுடன் சுடும்படி இந்தோனேஷியப் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

★ அமெரிக்க ஜனாதிபதி புஷ் ஒரு இலட்சத்து 96 ஆயிரம் கோடி டொலர் பட்ஜெட்டை காங்கிரஸுக்கு அனுப்பியிருக்கிறார்.

★ இந்தியாவில் பாதுகாப்பிற்கான நிதி சென்ற ஆண்டைவிட இவ் ஆண்டு 13சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

★ ஈராக்கிற்கு எதிரான பொருளாதாரத் தடைகளைநீக்குவது தொடர்பாக அமெரிக்கா எடுத்துள்ள முயற்சிகளை பாக்தாத் நிராகரித்துள்ளது. (உ- 3)

## கலாசாரச் சீரழிவுகள்

(மலேசியா)

மலேசியாவில் பிரபல தனியார் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றுஒலிபரப்பும்இந்திய திரைப்படங்களின் எண்ணிக்கையைக் குறைக்க முடிவு செய்துள்ளது.

இந்தியத் திரைப்படங்களால் கலாசாரச் சீரழிவுகள் ஏற்படுகின்றது என்று குற்றம் சாட்டப்பட்டிருப்பதையடுத்து இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (உ-5)

## பழிவாங்கும் 14 வயது சிறுவன்

(ரம்லலாஹ்)

நாட்டை பாதுகாக்கும் பணியில் ஈடுபட்ட தனது நண்பன் மரணத்திற்கு காரணமானவர்களை பழிவாங்குவேன் என்று 14 வயதான யூஸுப் அஹமது எனும் சிறுவன் சூளுரைத்துள்ளான்.

கலான்தியாவுக்கு அருகில் கடந்த திங்கள் அன்று இடம்பெற்ற 'இன்சிபாதா' போராட்டத்தில் ஈடுபட்டபோதே இச்சிறுவனின் நண்பன் கொல்லப்பட்டான். (உ-3)

# இஸ்ரேலில் குண்டுவெடிப்பு ஒருவர் பலி பலர் காயம்

[ஜெருசலேம்]

இஸ்ரேலின வடக்கு அரபு நகரில் குண்டொன்று வெடித்ததில் ஒருவர் கொல்லப்பட்டதுடன 9 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பலஸ்தீனத் தீவிர வாதிகளே இக் குண்டினை வெடிக்க வைத்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

இதனை உறுதிப்படுத்தும் வகையில், தீவிரவாதிகள் சிலர் வெடிமருந்துகளை வாகனத்தில் ஏற்றிச் சென்றதைக் கண்டதாக பொதுமக்கள் வாக்குமூலம் அளித்துள்ளனர் [உ-8]

# இஸ்ரேலியரின் பாதுகாப்பை உறுதிசெய்ய ஷெரோன் திடசங்கற்பம்

(ஜெருசலேம்)

இஸ்ரேல் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தப் போவதாக புதிய பிரதமர் ஏரியல் ஷெரோன் அறிவித்துள்ளார்.

இஸ்ரேலின் மேற்கு கரை மற்றும் காஸாவில் இடம்பெறும் பலஸ்தீனர்களின் துப்பாக்கிப் பிரயோகத்தை அடுத்தே இவ்வாறு கூறினார்

பலஸ்தீனர்களுடன் பேசத் தான் தயாராக இருப்பதாகவும் ஆனால் வன்முறைகளுக்கும், பயங்கரவாதத்திற்கும் மத்தியில் பேச்சுவார்த்தை நடத்த தான் தயாரில்லை எனவும் கூறியுள்ளார். (உ-3)

புலிகள் மீதான தடை விவகாரம்

# உலகத் தமிழர்களின் எதிர்ப்பை எதிர்கொள்ளும் நிலை வரலாம்

## பழ. நெடுமாறன் பிரிட்டனுக்கு எச்சரிக்கை

[புதுடில்லி]

சமாதானப் பேச்சுக்களில் புலிகள் அமைப்பின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கலந்து கொள்ள முடியாத நிலை ஏற்படுமானால் அதன் முழுப் பொறுப்பையும் பிரிட்டன் அரசே ஏற்க வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினை பிரிட்டன் அரசு தடை செய்திருப்பது குறித்து விடுதலை ஆதரவாளரும் தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவருமான பழ. நெடுமாறன் இவ்வாறு கண்டனம் தெரிவித்துள்ளார்.

நோர்வேயின் சமாதான முயற்சிகளை இத்தடை பெரிதும் பாதிக்கும் என்பதை வலியுறுத்திக் கூறியுள்ள நெடுமாறன், விடுதலைப் புலிகளின் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கலந்து கொள்ளாத சமாதானப் பேச்சு வார்த்தை பலன் தராது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் நோர்வேயின் சமாதான முயற்சியில் இலங்கை உடன்பாடு கிடையாது எனவும்,

சமாதானப் பேச்சுக்களில் பாதிப்பு ஏற்படும் பட்சத்தில் உலகில் பரந்து வாழும் தமிழர்களின் பலத்த கண்டனத்திற்கு பிரிட்டன் ஆளாவது தவிர்க்க முடியாதது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (உ)

# என்தாலி ரொம்ப பலம்வாய்ந்தது வீரப்பனை பிடிக்க முடியாது

## மனைவி தெரிவிப்பு

(புதுடில்லி)

''சந்தனக் கடத்தல் வீரப்பனை இலேசில் பிடிக்க பொலிஸாரால் முடியாது. ஏன் என்றால் என் தாலி ரொம்ப பலம்வாய்ந்தது''

இவ்வாறு வீரப்பனின் மனைவி முத்துலட்சுமி தெரிவித்துள்ளார்.

வீரப்பனை பொலிஸார் நெருங்கி விட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றபோதும் எனக்குத்துளி கூடப் பயமில்லை.

வீரப்பன் தானாகவே பொலிஸாரிடம் சரணடைந்தாலொழிய, பொலிஸாரினால் அவரைப் பிடிக்க முடியாது.

வீரப்பனுடன் இருப்பவர்கள்மிகவும் பலம் வாய்ந்தவர்கள்.

நடிகர் ராஜ்குமாரைக் கடத்திய போது முன்வைத்த கோரிக்கைகளை அரசாங்கம் தட்டிக் கழித்து வருவதை மக்கள் பார்த்துத் கொண்டு தானிருக்கிறார்கள்.

எதுவந்தாலும்தாங்கிக் கொள்ளும் மனபலம் இருக்கின்றது. எப்படியும் வீரப்பன் சரணடைவார். அரசும் பொதுமன்னிப்பு வழங்கும் குழந்தைகளுடன் நாம் சந்தோசமாக வாழுவோம்.

இவ்வாறுநம்பிக்கை தெரிவித்துள்ளார் வீரப்பனின் மனைவி முத்துலட்சுமி. (க-செ)

## உலக தரிசன அறிவுப் போட்டி இல. 7

### பாராட்டுப் பெறுவோர்

(நேற்றைய தொடர்ச்சி)

இவ் உலகதரிசன அறிவுப் போட்டியில் பல நூறு பேர் கலந்துகொண்டனர். இப்போட்டியில் அனேகர் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடை எழுதியமையால் குலுக்கல் முறையில் தெரிவினை நடத்தியுள்ளோம்.

வெற்றி பெற்ற முதல் மூவர்களுக்கான பரிசில்கள் 09-03-2001 அன்று முற்பகல் 10.00 மணிக்கு ''வலம்புரி'' அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட இருக்கின்றன.

- ★ விசுவலிங்கம் செல்வநாயகம் 126/4 பலாலி வீதி திருநெல்வேலி
- ★ விவேகாநந்தன் கோகுலன் தபாலக வீதி சாவகச்சேரி
- ★ தம்பையா யோகராசா சாவகச்சேரி பிரதேசசபை
- ★ சு.யோகேஸ்வரி தொல்புரம் கிழக்கு, தொல்புரம்
- ★ சு. யோகமலர் தொல்புரம், கிழக்கு, தொல்புரம்
- ★ முருகேஸ் பிரதீப் நீர்வேலி வடக்கு, நீர்வேலி
- ★ நாராயணன் வசந்த மொழி பிள்ளையார் கோவிலடி வடலியடைப்பு
- ★ சகுந்தலா குணரத்தினம் ஆர்.பி.ஜி நல்லூர்

பிறப்பொக்கும் எல்லா
உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்
-றுமையான்.
- குறள்

# வலம்புரி

## அறிஞர்களின் பிதாமகர்

ஒரு காலத்தில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி தமிழ்த்துறையில் தனக்கென ஒருதனியான இடத்தை வகித்திருந்தது. தமிழில் துறைபோன அறிஞர்கள் அங்கு ஆசான்களாகக் கடமையாற்றினர். அதனால் தமிழ் அறிஞர்கள் உருவாகினர். அவ்வாறு தமிழ் அறிஞர்களை உருவாக்கிய ஆசான்களில் சிவராமலிங்கம்பிள்ளை அவர்கள் குறிப்பிடத்தக்கவர். அவரின் தமிழ் அறிவும், ஆற்றலும், பேச்சுத்திறனும், முகவசியமும் தமிழ்ச் சால்புடைய அறிஞர்களை நமக்கு ஈர்ந்தளித்தது.

இன்று அதி உயர் பதவிகளில் இருப்பவர்கள், இலக்கிய உலகில் தமக்கென தனியிடத்தைப் பிடித்தவர்கள், இயல் தமிழில் இடியென முழங்க வல்லவர்கள் என்றெல்லாம் தேடி எடுத்தால் அவர்கள் எல்லோரும் சிவராமலிங்கம்பிள்ளை ஆசானின் மாணவர்கள் என்பது மறுக்கமுடியாத உண்மை.

ஒரு காலத்தில் பல மாணவர்கள் ஒரு ஆசிரியருக்கு உரிமை கோரினார்கள். 'நான் இந்த ஆசிரியரிடம் கற்றவனென்று மார் தட்டினார்கள்' அதனால் அந்த நேரத்து ஆசான்கள்மௌனமான புன்னகையுடன் பேருவகையுற்றார்கள்.

ஆனால் இன்றுநிலைமை அப்படியல்ல, ஒரு மாணவனுக்கு பல ஆசிரியர்கள் உரிமை கோரும் காலம். எட்டு டி', நாலுஏ'எடுத்த மாணவனைப் பங்கு போட ஆசிரியர்கள் வரிசையில் நிற்கிறார்கள். இது இற்றைக காலத்து அரச- தனியார் துறைகள் தந்த கலப்பு முறைக் கல்வியின் பரிசு அனுபவித்தே ஆகவேண்டும்.

ஆனால் ஆசான்சிவராமலிங்கம்பிள்ளை அவர்கள் இன்றும் பங்குபோடப்படுகிறார். அப் பங்கிடலில் அறிஞர் பெருமக்கள் போட்டி போடுகின்றார்கள். 'நாம் சிவராமலிங்கம்பிள்ளையின் மாணவர்கள்' என்றஅப்பங்கிடலை எண்ணும் போது என்னே அற்புதம், என்னே தமிழாற்றல் என்று மனம் ஆனந்தமடைகிறது.

அவர் தம் மாணாக்கர்கள் அறிஞர்களாக சுற்றியிருக்க 'ஆசான் சிவராமலிங்கம்பிள்ளை பவளவிழாக்காண்கிறாரென்றால் அது யார்க்கும் கிடைத்தற்கரிய பேறாகும். சுருங்கக் கூறின் ஆசான் சிவராமலிங்கம் பிள்ளை அவர்கள்அறிஞர்களின் பிதாமகர்என்றால் அது மிகையாகாது.

---

பரமபிதா காட்டிய பாதை



# ஆசைகள் அவலங்களை ஒழித்து அமைதிக்காகப் பிரார்த்திப்போம்

மீண்டும் ஒருதவக்காலம். இறைவனின் மாபெரும் கொடையாக எமக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. ஒப்புரவின்காலம் என்றும், மனமாற்றத்தின் காலம் என்றும் அழைக்கப்படும் இத்தவக்காலமானது கிறிஸ்தவர்களுக்கு மிகமிக முக்கியமானது.

பரித்தியாக வாழ்வு வாழ்வதற்குக் கடந்தகால பாவ வாழ்வைவிட்டு மனம் வருந்தி மன்னிப்புக்கேட்டு; அயலவரோடு ஒப்புரவாகி இறை உறவை ஆழப்படுத்திப் புனிதப்படுத்தவும், இறைமகன் கிறிஸ்துவின் பாடுகள்மரணம் உயிர்ப்புஎன்பவற்றை தியானிக்கவும் இக்காலம்நமக்கு அழைப்புவிடுக்கின்றது.

### உண்ணாநோன்பு

எமதுமீட்பர் இறைமகன் கிறிஸ்து நாற்பது நாட்கள் பாலை வனத்தில் உண்ணா நோன்பிருந்து, நோன்பின் மகத்துவத்தையும் தொடர்ந்து அவஸ்தையினால் பல சோதனைக்குட்பட்ட போது தூய ஆவியின் துணையோடு அவற்றை மேற்கொண்டு புனிதவாழ்வின் மேன்மையையும் எமக்கு காட்டி இருக்கின்றார்.

இறைமகன் கிறிஸ்து மூன்று முறை சோதனைக்குட்படுத்தப்பட்டார். ஒவ்வொரு முறையும் அற்புதமாக அவற்றை வென்றார். காரணம் அவருக்குள் இறைவனின் ஆற்றல், வல்லமை, சக்தி அனைத்தும் ஒன்று சேர்ந்து இருந்தது அதாவது இயேசு தூயஆவியால் நிறைந்தவராய், அதே ஆவியால் வழி நடத்தப்பட்டார்

இன்று நாம் எமது இதயத்தில் எத்தனையோ ஆசைகளையும் எதிர்பார்ப்புக்களையும் வளர்த்துக்கொண்டு, அமைதியிழந்து, அன்புஇழந்து சகோதரத்துவம் இழந்து ஆதரவுக்காக அலைந்துகொண்டிருக்கின்றோம்.

### நம்மோடு வசிக்கின்றார்

கடவுள் அன்று இஸ்ரேல் மக்களின் குரலுக்குச் செவிமடுத்து அவர்களுக்காக பார்வோனின் இதயத்தைநொருக்கினாரோ, எந்தக் கடவுள் செங்கடலை இரண்டாகப் பிளந்தாரோ, எந்தக்கடவுள் வானத்திலிருந்து மின்னலைப் பொழிந்தாரோ அந்தக் கடவுள் நம்மைக் காப்பாற்ற தூய ஆவியின் உருவிலே நம் நடுவே வாசம் பண்ணுகிறார்.

இயேசுவை ஆண்டவராக உள்ளத்தில் ஏற்றுக்கொள்ளுவோம். அவரே எமக்கு நலன்தர அமைதி தரக்கூடியவர் என்பதைப் பறைசாற்றுவோம். நமது முழு விசுவாசத்தையும் அவர்மீது வைக்கும்போது இனம், மொழி, நாடு அனைத்தையும் கடந்து நின்று வேறுபாடின்றி அனைவர் மீதும் அவர் ஆவியை பொழிந்திடுவார். எனவேஇத் தவக்காலத்தில்பாவங்களைக் களைத்து உன்னத வாழ்க்கை வாழ்ந்து, இறையரசுக்கு எம்மைத் தயார்படுத்துவதோடு இக்காலத்தில் நிறைவான புதுவாழ்வை பெற்றுத் தந்து, இறை உறவில்சகோதர உறவில் எம்மை வளர்த்துக் கொள்ள நாளாந்த வாழ்வில் நாளும் அடி எடுத்து வைப்போம். சிலுவைப் பாதைவழி சென்று மீட்பைக் கண்டடைவோம்.

அலெக்ஸ் அமலரட்ணம்

---

சோதிட பலன்

# நவக்கிரகபீர் திக்து நவமணிகளணியலாம்.

# இறை வழிபாடு தோஷங்களை நீக்கி விடும்

ஒவ்வொருவரும் தம்முடைய வாழ்க்கையை இன்பகரமாகவும், உபயோகமுள்ளதாகவுமாக்குவதற்கே முயலுகின்றனர். ஆகையால் தம்முடைய எதிர்காலம் எப்படியென்றறிய ஆவலுடையவர்களாயிருக்கின்றனர். வருங்காலத்தை, ஓரளவு அறியத்தக்கதாகச் செய்வது சோதிடமே. சோதிடம் இருட்டில் செல்லும் மனிதனுக்கு ஒரு கைவிளக்குப் போன்றது. இவ் வெளிச்சம் மனிதனின் வாழ்வுப் பாதையில் துன்பம் விளைவிக்கக் கூடிய மேடுகள், பள்ளங்கள், கற்கள், முட்கள் போன்றவற்றிலிருந்து விலகி நடந்து இன்பகரமாகவும், வெற்றிகரமாகவும் வாழ வழிகாட்டவல்லது.

பிரபஞ்சம் முழுவதிலுமே இறைவன், அவன் இல்லா இடமேயில்லை. சைவசமயத்தின்படி சிவபெருமான் அர்த்தநாரீஸ்வரர் (மாதொருபாகன்) அதாவது இடது பாகம் பெண்ணும், வலது பாகம் ஆணுமாம். உலகத்தில் எதை எடுத்தாலும் இரண்டு கரு - எல்லா சீவஜெந்துக்களிலும் ஆணும் பெண்ணும், மரங்களில் ஆணும் பெண்ணும், மீன்களில் ஆணும் பெண்ணும், மின்சாரத்தில் ஆணும் பெண்ணும் [Positive - Negative] அப்படியே ஆணும் பெண்ணுமாய் கடவுள் எல்லாவற்றிலும் செறிந்து நிற்கிறாராகையால் இராசிகளும், அவைகளின் குணங்களும் ஆணும் பெண்ணுமாய்இருக்கின்றன. கடவுளை நாங்கள் சிவபெருமான் என்கின்றோம். கடவுளுடைய அருளைப் பெற்றால் கிரகங்களின் சக்தி எங்களைப் பாதிக்காது.

சிவனுக்கும், சக்திக்கும் ஒப்பாரும் மிக்காருமில்லாதபடியால் அவர்களுக்குச் சோடி இராசியில்லை. சிவனுக்குச் சிங்கராசி, சக்திக்குக் கடகராசி, சிங்கத்தின் பூதம் அக்கினி, கடகத்தின் பூதம் சலம். முந்தியது ஆண் தன்மையுடையது, பிந்தியது பெண் தன்மையுடையது.

தற்கால ஆராய்ச்சியின்படி உலகம் அக்கினிப் பிளம்பில் (அதாவது சிவபெருமானில்) இருந்தே உண்டாகியது. என்று கண்டிருக்கிறார்கள். அக்கினியிலிருந்து சலம் (அதாவது சக்தி) அதிலிருந்து நிலம். அப்படியே வாயு ஆகாயமெல்லாம் உண்டாகியது. பஞ்ச பூதங்களும் கடவுளே. இந்தப்பூமியிலிருப்பது போன்ற வஸ்துக்களே மற்ற அண்டங்களிலும் உள்ளன. எல்லா உலகத்திற்கும் ஒரே உற்பத்தியானமையினால் ஒரே குணமுள்ள வஸ்துக்கள் எங்கும் காணப்படுகின்றன.

''எல்லாவுலகமும் ஆனாய் நீயே'' என்ற தேவாரம் இவ்வுண்மையை வலியுறுத்துகின்றது.

பன்னிரெண்டு இராசிகளில் சிவனுக்கு ஆறு இராசிகளும், சக்திக்கு ஆறு இராசிகளுமாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. சிங்கராசியில் சிவனும், கடக இராசியில் சக்தியும் இருப்பதும், சூரியனையும், சந்திரனையும் தவிர மறுகிரகங்கள் ஐந்தும் சிவனின் அம்சத்தில் ஒரு வீட்டுக்கு அதிபதியாயும், சக்தியின் அம்சத்தில் ஒரு வீட்டுக்கு அதிபதியாயும் இருப்பதையும் கவனிக்கவும். புதன், வியாழன், வெள்ளி, சனியின் மூலத்திரிகோண இராசிகளெல்லாம் ஆணின் (சிவனின்) அம்சத்திலேயே இருப்பதையும் கவனிக்கவும். உமையினுடையதும் குமாரனுடையதும் (முருகன்) மூலத்திரிகோண இராசிகள் சக்தியின் அம்சத்திலிருப்பதைக் கவனிக்கவும். தாயும் சேயும் அருகிலிருக்கிறார்கள்

ஒவ்வொரு சாதகத்திலும் சில கிரகங்கள் மாரகராய் (அதாவது சுகவீனம் அல்லது சாவு உண்டாக்கக் கூடிய கிரகங்களாய்) வரும்; அப்பொழுது அக்கிரகங்களின் அதி தெய்வங்களைப் பூசித்தால் சாந்தி உண்டாம்; பாவ புண்ணியத்தின் படி அனுபவிக்க வேண்டியது தானே, கடவுளால் எப்படிக் குறைக்க முடியும் என்ற கேள்வி எழுகிறது. இதற்கு மறுமொழி எமது முன்னோர் அனுபவத்தில் செய்து கண்டவற்றையே எழுதிவைத்துள்ளனர். சுகவீனத்துக்கு மருந்து எப்படியோ, அப்படியே கடவுள் வழிபாடும். கடவுள் உருவமற்றவர் அவரைப் பற் பல ரூபங்களில் அடியார்கள் வணங்குகின்றனர் நவக்கிரகங்களைப் படைத்தவர் கடவுளே ஆகையால், அவர்களுடைய நிலையால் தீங்கு வருமென முன்னறிந்து, அவற்றைக் குறைப்பதற்கு, அல்லது இல்லாமற் செய்வதற்கு இறை வழிபாடே தகுந்த முறை

முற்பிறப்புகளிற் செய்த பாவ புண்ணியங்களைக் காட்டி நிற்கும் கிரகங்களால் வருவனவற்றை முன்னரே அறிந்து கெடுதிகள் வரின் அவற்றை அகற்றத் தகுந்த முறையில், பச்சாத்தாபப்பட்டு அப் பாவங்களுக்குப் பதிலாகப் புண்ணியங்களை இப்பிறவியில் செய்தால், பாவமும் புண்ணியமும் சமன்படும். இதற்கு வழிமுறைகளை (மணி, மந்திர, ஔசதாதிகள்) நம் முன்னோர் வகுத்து வைத்துள்ளனர். குறித்த கிரகத்தை ஆராதனை செய்தல், அல்லது நவக்கிரகங்களுக்குரிய இரத்தினங்களை (மணி) ஆபரணங்களில் அணிவதால் கிரகசாந்தியும் அதிஷ்டமும் உண்டாகும் என்பதாம், இவைகள் மழைக்குக் குடை பிடிப்பது போன்றதே. மழையை நிற்பாட்ட இயலாது, ஆனால் நனையாமல் போகலாம். இவைகள் எல்லாவற்றிற்கும் மேலான பேறு கடவுள் கடாட்சம் பெறுதலே. சூரியன், வியாழனுக்கு அதிதேவதையாய்ச் சிவனையும், செவ்வாய்க்கு முருகனையும், ஏனைய கிரகங்களுக்குச் சக்தியை (உமையை) வழிபடலாம் நவமணிகளில் சூரியனுக்கு மாணிக்கம், சந்திரனுக்கு முத்து, செவ்வாய்க்குப் பவளம், புதனுக்கு மரகதம், வியாழனுக்குப் புஸ்பராகம், வெள்ளிக்கு வைரம், சனிக்கு நீலம், இராகுவுக்கு கோமேதகம், கேதுவுக்கு வைடூரியம் சிறந்ததென முன

(2-ம் பக்கம் பார்க்க)

செ- சோதிநாதன்

---

# தவக்காலச் சிந்தனை - 5



''என் சொந்தக் கதை முழுதும் சோகக் கதையாக இருக்கிறது'', ''சோதனை தீரவில்லை சொல்லி அழ யாருமில்லை'' இது மனித சமூகத்தின் அவலக்குரல். இன்றைய நற்செய்தியின் நாயகன் இயேசு வீரமுடன் தன்னை சோதனைக் களத்தில் அர்ப்பணிக்கிறார். கிறிஸ்தவ விசுவாசம் உலையிலிட்ட பொன்னாக புடைக்கப்பட்டு தூய்மை நிலையடைய வேண்டும். சிப்பிக்குள் இருக்கும் முத்தாக தூய்மைப்படுத்தப்பட்டு உலகிற்கு ஒளி வீச வேண்டும். பட்டை தீட்டப்பட்ட வைரமாக ஒளிர வேண்டும். அலகையின் தாக்கத்தை, இருள் சூழ் சிந்தனைகளை, குறுக்குவழி சோதனைகளை இறைமகன் உதறித் தள்ளி சிதறடிக்கிறார். கடவுளின் வார்த்தைக்கும். இறைத்தந்தைக்கும் தன்னையே அர்ப்பணிப்பதன் மூலம் சோதனைத் தீயிலிருந்து சூரியக் கதிர்போல் வெற்றியுடன் மீண்டு வருகிறார். ''நமது வாழ்விலும் இறைவனுக்கு முதலிடம், இறைவார்த்தைக்கு முதலிடம், மற்றவையனைத்தும் இறைவனின் வார்த்தையின் தூண்டுதலில் உய்த்துணர்ந்த பிறகே'' எனும் நிலைப்பாடு உறுதியாக எடுப்பதன் மூலம் சோதனைத் தீயினை சிதறடிப்போம்.

காவலன்

மங்கையர் மனங்களைக்
கொள்ளை கொள்ளும்
தங்க நகைகளைப்
பெற்றுக்கொள்ள
நியூ நகுலா
ஜுவல்லறி
74, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
[கி-1540]

# யாழ். செயலகத்தில் ஜேர்மன்தூதுவர் திணைக்களத் தலைவர்கள் சந்திப்பு

## பல உதவித்திட்டங்கள் முன்வைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் செயமகத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற தூதுவருடனான சந்திப்பின்போது திணைக்களத்தலைவர்கள் முன்வைத்த உதவித்திட்டங்கள் வருமாறு.

● யாழ்ப்பாணத்தில் நடமாடும் எக்ஸ்றே நிலையம் ஒன்றை அமைத்துத்தருவதுடன் அதற்குரிய யந்திர சாதனத்தை ஜேர்மன்தந்துதவுதல்.

● இடம் பெயர்ந்தவர்கள் மீளக்குடியமர்வதற்கு ஏற்ற வகையில் வீடுகள் அமைப்பதற்கு உதவுதல்.

● பருத்தித்துறைக்கும் சாவகச்சேரிக்கும் குடிதண்ணீர் வசதி ஏற்படுத்தித்தருதல்.

● கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக ஜேர்மன் அரசினால் அனுப்பிவைக்கப்பட்டிருந்த எக்ஸ்றே யந்திரம் பொருத்துதற்கு தொழிநுட்ப உத்தியோகத்தர்இன்மையால் பெட்டிக்குள் உறங்கிக்கிடப்பதாகவும், அதனைப்பொருத்துவதற்கு ஜேர்மன் பொறியியலாளர் ஒருவரைதந்துதவுதல் போன்ற உதவிகளைச் செய்யுமாறு தூதுவருடனான சந்திப்பின்போது திணைக்களத் தலைவர்கள் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தனர்.

யாழ் அரச அதிபர் க.சண்முகநாதன் தலைமையில் நேற்றுக்காலை நடைபெற்ற இக் கூட்டத்தில் இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் ஜோர் ஜன் எனலைஸ கலந்து கொண்டார்.

இச் சந்திப்பின் போது கோப்பாய் வைத்திய அதிகாரி டாக்டர் இந்திரராஜா வடபிராந்திய போக்குவரத் சபைத் தலைவர் வி.எஸ். சொக்கலிங்கம், யாழ் போதனாவைத்திய சாலைப்பணிப்பாளர்டாக்டர் செல்வி தவமலர் கனகரத்தினம் இலங்கை மின்சாரசபை வடபிராந்திய முகாமையாளர் எஸ். முத்துரட்ணானந்தம் உதவி விவசாயப் பணிப்பாளர் எஸ். சின்னத்துரை மற்றும் பிரதேச செயலர், உதவி அரசாங்க அதிபர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடலை அடுத்து ஜேர்மன் தூதுவர் நேற்று மாலையே கொழும்பு பயணமானார். (வ)

அழகிற்கு அழகூட்டும்
தங்க நகைகளை
உடனுக்குடன் செய்து
தருபவர்கள்
நியூ
ராதிகாஸ்
நகைமாளிகை
189. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி/ 1543)

## உயிருக்கு ஆபத்து

(மட்டக்களப்பு)

பொங்கு தமிழ் நிகழ்ச்சியில் பங்கு கொண்ட கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு கொலைப் பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொங்கு தமிழ் நிகழ்ச்சிக்கு புலிச் சாயம் பூசி உயிருக்கு ஆபத்து விளைவிக்கும்முயற்சி நடப்பதாக மாணவர்கள் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளனர். (ம)

## 72 லொறிகளில் வன்னிக்கு உணவு

(வவுனியா)

இராணுவக் கட்டுப்பாடற்ற கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார்ப்பிரதேசங்களுக்கு கடந்த வாரம் 72 லொறிகளில் உணவுப் பொருட்களும் அத்தியாவசியப் பொருட்களும் பிரமணாளங்குளம் சோதனைச் சாவடியினூடாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக விசேட ஊடகத்தகவல் நிலையம் அறிவித்துள்ளது. [ந-9]

## சுதந்திரக்கட்சியின் தலைவியாக ஜனாதிபதி

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியாக நேற்று இடம் பெற்ற தேசிய நிறைவேற்றுக் குழுக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அமைச்சர் எஸ். பி திஸநாயக்கா கட்சியின் பொதுச் செயலாளராகவும்' அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த தேசிய அமைப்பாளராகவும் அமைச்சர் மங்களசமரவீரபொருளாளராகவும் தெரிவாகியுள்ளனர். (ந-4)

## கப்பல்-விமான பயணிகட்கு, ரானின் அறிவிப்பு

[யாழ்ப்பாணம்]

கப்பல் மற்றும் விமானப்பயணிகள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் தொடர்பாக ரான் அலுவலகம் செய்திக் குறிப்பொன்றை வெளியிட்டுள்ளது. அதில் பின் வரும் விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

★கப்பல் பயணிகளுக்கான பதிவுகள் ஒவ்வொருவெள்ளிக்கிழமையும் மேற் கொள்ளப்படும்.

★கப்பல் பதிவுகளின் போது பயண அனுமதி பார்த்தல், விமானப் பயணப் பதிவுகள் என்பன மேற்கொள்ளப் படமாட்டாது.

★கப்பல் பயணிகள்தம்முடன் 30 கிலோக்கிராம் எடைக்கு மேற்பட்ட பொருட்களை கொண்டுசெல்ல முடியாது.

★இராணுவபாதுகாப்பு முன் அனுமதியின்றி இலத்திரனியல் பொருட்கள், மின்சாரப் பொருட்கள் .மற்றும்வீடியோ ஓடியோ ஒளி ஒலி நடாக்கள் கொண்டு செல்ல முடியாது.

★பயண அனுமதி பெற்றவர்களின் பெயர்விபரப்பட்டியல் உரிய பிரதேச செயலகங்கள் மற்றும் பிரதேச சபைகளுக்கு அனுப்பிவைக்கப்படும்.

உரியவர்கள் அதனைப்பார்வையிட்டு அனுமதி கிடைத்துள்ளதை உறுதிசெய்த பின் யாழ் மணியம் கட்டிடத்தில் உள்ள ரான் அலுவலகத்தில் அனுமதியைப் பெற்றுக் கொள்ள முடியும். (இ)

## மீண்டும் தங்கராஜா

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய மகாநாட்டில் கட்சியின் யாழ்மாவட்ட பிரதமஅமைப்பாளராக மீண்டும் வேல்முருகு தங்கராஜா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நேற்று ஜனாதிபதிசந்திரிகா குமாரதுங்காவின் தலைமையில்கொழும்பில் இடம்பெற்ற இம் மாநாட்டில் நடப்பு வருடத்துக்குரிய கட்சிசெயற்குழு தெரிவும் இடம்பெற்றது.(இ)

## தேசிய பாடசாலையை பரிசீலிக்க புதிய திட்டம்

(கொழும்பு)

நாட்டில் உள்ள அனைத்துத்தேசிய பாடசாலைகளின் நடவடிக்கைகளையும் பரிசீலிக்கும் புதிய வேலைத் திட்டமொன்று கடந்த முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிறேம் ஜயந்த தெரிவித்துள்ளார்.

இப்புதிய திட்டம் எதிர் வரும் செப்ரெம்பர் முப்பதாம் திகதி முடிவடையுமென்றும், இதுவரைகாலமும் வருடம் முழுவதும் இடம் பெற்று வந்த ஆசிரியர் இடமாற்றம் மற்றும் பாடசாலைகளுக்கு மாணவர்களைச் சேர்க்கும் நடவடிக்கைகள் இனிமேல் வருடத்தின் முதல் இரு மாதங்களில் மட்டுமே இடம் பெறுமென்றும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

வாரியப்பொல சுமங்கல தேசிய படசாலையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். (4)

## லொறி விபத்தில் காயம்

அளவெட்டியில் இடம் பெற்ற லொறிவிபத்தில்தலையில் காயமடைந்த நிலையில் உரும்பிராயைச் சேர்ந்த கந்தன் ஆறுமுகம் [வயது 57] என்பவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-6)

### புலிகளை ...

யில் அவர்கள் சமாதானப் பேச்சுவார்த்தையில் நாட்டம் உடையவர்களாக இருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது.

புலிகளை சமாதானப்பேச்சிற்கு தயாராக்குவதற்கு சர்வதேச சமூகத்தின் அழுத்தம் ஒருபுறமும், அரசுமேற்கொள்ளும் யுத்தமுனைப்பு மறுபுறமும்அவசியம்தேவைப்படுகிறது. இவை இரண்டும் ஒரேநேரத்தில் நடைபெறுமானால் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வருவார்கள் என்றும் ஜனாதிபதி மேலும் கூறியுள்ளார். (ம)

## பொலிஸ் அதிகாரி தற்கொலை

கினிதுமைப் பொலிஸ்நிலையத்தின் இரவு நேரப்பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய பொலிஸ்அதிகாரிஒருவர் தற்கொலை செய்துள்ளார்.

நேற்று அதிகாலை 2மணியளவில் தன்னைத் தானே சுட்டு இவர் தற்கொலை செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-4)

### இந்தியா ...

கடற்படையினர் பயிற்சி அளித்து வருவதாகவும் அதனைப் பார்வையிடவே தூதுவர் யாழ்ப்பாணம் வந்துள்ளதாகவும் ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன, [ம]

## தொழிற் பட்டறை

க. பொ. த(உ/த) மாணவர்களின்புதிய பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஒப்படை பற்றி யாழ். மாவட்ட உயர்தர வகுப்பு விஞ்ஞான ஆசிரியர்களுக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் பெப்ரவரி 6 ஆம் திகதி நடத்தப்பட்ட முதலாவது தொழிற் பட்டறையின் தொடர்பு நிகழ்வாக இரண்டாவது தொழிற்பட்டறை, இம்மாதம் 7ஆம் திகதி புதன் கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூல்நிலையக் கேட்போர் கூடத்தில் நடைபெறுமென யாழ்ப்பாணப்பல்கலைக்கழகவிஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இ: குமாரவடிவேல் அறிவித்துள்ளார்:

முதற்பட்டறையில் பங்குபற்றிய ஆசிரியர்கள் மட்டுமே இப்பட்டறையில் பங்கு பற்ற அனுமதிக்கப்படுவர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## கண்ணீர் அஞ்சலி

வெஸ்கோ மருந்தகம்
(யாழ்ப்பாணம், கல்வியங்காடு, மந்திகை)
யாழ். வைத்தியசாலை (தனியார்)
ஆகியவற்றின் உரிமையாளரும்
கொக்குவில் லயன்ஸ் கழகத் தலைவரும்
க. மு. பத்மநாதன்
அவர்களின் அன்புத்தாயார்
திருமதி
முருகேசு நாகரெத்தினம்
அவர்கள் காலமானதையிட்டு அவர்களின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்தஅனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

"வாழ்க்கை வாழ்வதற்கு
வாழும் காலம் நல்லதைச் செய்வதற்கு"

மெடிலான்ட் ஆங்கில மருந்து
நிறுவனம்
சங்கானை
E.N.T கிளினிக் உரிமையாளர்
யாழ். வைத்தியசாலைப் பங்காளர்
லயன் S. குலேந்திரராசா
(கி-1548)

மேகாஸ்
CDயிலிருந்து CDக்கு புதிய பழைய பாடல்கள் பதிவுசெய்துகொள்ளவும் CD யிலிருந்து கசற்றுக்கு பதிவுசெய்து கொள்ளவும், நவீன வீடியோ கமரா மூலம் வீடியோ படப்பிடிப்பு உட்புற, வெளிப்புற படப்பிடிப்பு [PHOTO] மற்றும் மணப்பந்தல் சேவைகளுக்கும் நாடுங்கள்.
மேகாஸ்
வீடியோ
ஓடியோ
அன்
மிக்சிங்
ஸ்ரூடியோ
23, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி/1547)

## பவள விழா நாயகர்
'எங்கள் வசிட்டர்'
திரு. க. சிவராமலிங்கம்பிள்ளை
அவர்கள்



நலமுடன்
பல்லாண்டு வாழ
இறைவனைப்
பிரார்த்தனை
செய்கின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்
Yarl Hall
கல்வி நிலையம்
93A, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
[2582]

இப் பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தினரால் இல; 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களதுஅச்சகத்தில் 2001 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 4ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.